வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu




Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 05.08.2025 செவ்வாய்க்கிழமை இதழ் : 217 பக்கங்கள் : 12

# மாகாண சபைகளுக்கு அதிகாரம் முழுமையாக - முறையாக பகிர்க

## ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்து

கொழும்பு, ஓகஸ்ட் 05

"மாகாணங்களுக்கு உரித்தான அதிகாரங்களை ஜனாதிபதி நிறைவேற்று அதிகாரம் மூலம் பறித்துள்ளார். சுகாதாரம், கல்வி, நிர்வாக கட்டமைப்பில் இந்த நெருக்கடி நிலைமை காணப்படுகிறது. மாகாணங்களுக்குரிய விடயதானங்கள் பலவந்தமான முறையில் மத்திய அரசுக்கு மீளப்பெறப்பட்டுள்ளன. மாகாணங்களுக்கு அதிகாரங்களை பகிர்வதாயின் முழுமையாக - முறையாக பகிர வேண்டும் அல்லது ஒன்றும் செய்யாமலிருக்க வேண்டும்", என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

அத்துடன், "மாகாண சபைகளுக்கு முழுமையான அதிகாரங்களை வழங்கினால் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சுயநிர்ணயம் தோற்றம் பெறும் என்று ஒரு தரப்பினர் தவறான நிலைபபாட்டை ஏற்படுத்தியுள்ளார்கள். இதற்கு ஒருசில அரசியல் கட்சிகள் பொறுப்புக்கூற வேண்டும். மாகாண சபைகள் தேர்தலை நடத்த எடுத்துள்ள நடவடிக்கைகளை அரசாங்கம் வெளிப்படையாக அறிவிக்க வேண்டும்", என்றும் அவர் கூறியுள்ளார்.

கொழும்பில் நேற்று அவர் நடத்திய ஊடக சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

மாகாண சபைகள் தேர்தலை நடத்துவதற்கான அவசியம் அரசாங்கத்துக்கு உள்ளது. ஆனால், பொறுப்பற்ற வகையில் அரசாங்கம் செயல்படுகிறது. மாகாண சபைகள் தேர்தல் பற்றி அடுத்தாண்டு ஜனவரிக்கு பின்னர் தீர்மானிக்க முடியும் என்று அமைச்சர் ஒருவர் குறிப்பிடுகிறார். மாகாண 11

# மனித உரிமை ஆணைக்குழு புதைகுழியை பார்வையிட்டது

- பு. கஜிந்தன், த. பிரதீபன் -

யாழ்ப்பாணம், ஓக. 05

அரியாலை - சித்துப்பாத்தி மனித புதைகுழிகளின் அகழ்வு பணிகளை மனித உரிமைகள் ஆணைக்குழுவினர் நேற்று நேரில் பார்வையிட்டனர்.

இதன்போது, மனித புதைகுழிகள் தொடர்பான சாட்சிகளுக்கு பாதுகாப்பு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க ஆணைக்குழு தயாராக உள்ளது என்றும் அவர்கள் கூறினர்.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கலாநிதி 11

# முன்னாள் ஜனாதிபதிகளின் சிறப்புரிமைகள் இரத்தானால் சட்ட நடவடிக்கை எடுப்போம்!

கொழும்பு, ஓக. 05

முன்னாள் ஜனாதிபதிகளின் சிறப்புரிமைகளை இரத்துச் செய்யும் வகையில் வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டுள்ள சட்டமூலத்துக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்போம் - இவ்வாறு சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

தனது கட்சியின் தலைமை பணிமனையில் 11

# மாகாண சபை தேர்தல் விவகாரம் சர்வகட்சி மாநாட்டை நடத்துங்கள்

## சிறீ லங்கா பொதுஜன பெரமுன வலியுறுத்து

கொழும்பு, ஓக. 05

மாகாண சபைகள் தேர்தலை நடத்துவது குறித்து ஆராய ஜனாதிபதி சர்வகட்சி தலைவர்கள் மாநாட்டை நடத்த வேண்டும். தமிழ் மக்களுக்கு வழங்கிய ஆணையை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்கு உண்டு - இவ்வாறு சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பிரேம்நாத் சி. தொலவத்த தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் அவர் நடத்திய ஊடக சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

இனப் பிரச்னைக்குத் தீர்வாகவே மாகாண சபைகள் 11

## அரியாலை மனித புதைகுழி:

# மீட்கப்பட்ட சான்று பொருட்களை மக்கள் இன்று பார்வையிடலாம்!

- பு.கஜிந்தன், த.பிரதீபன் -

யாழ்ப்பாணம், ஓக. 05

அரியாலை - சித்துப் பாத்தியில் அகழப்படும் இரு மனிதப் புதைகுழிகளிலிருந்து மீட்கப்பட்ட சான்றுப் பொருட்களை இன்றைய தினம் பொதுமக்கள் பார்வையிட முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்று செவ்வாய்க்கிழமை மதியம் 1.30 மணி முதல் மாலை 5 மணி வரையில் அரியாலை - சித்துப்பாத்தி இந்து மயானத்தில் இந்த சான்றுப் பொருட்கள் காட்சிப்படுத்தப் 11

## அரியாலை மனித புதைகுழி:

# 5 மனித எலும்புக்கூடுகள் நேற்றும் கண்டறியப்பட்டன

- பு. கஜிந்தன், த. பிரதீபன் -

யாழ்ப்பாணம், ஓக. 05

அரியாலை மனிதப் புதைகுழிகளிலிருந்து நேற்று திங்கட்கிழமையும் 5 மனித எலும்புக்கூடுகள் கண்டறியப்பட்டன. அத்துடன், ஏற்கனவே கண்டுபிடிக்கப்பட்ட 6 மனித எலும்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டன.

அரியாலை - சித்துப்பாத்தி மயானத்தில் இரு மனிதப் புதைகுழிகளில் அகழ்வு பணிகள் 11

# அர்ச்சுனாவிடம் வாக்குமூலம் பெற்றது சி.ஐ.டி.

கொழும்பு, ஓக. 05

யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இ. அர்ச்சுனாவிடம் குற்றப் புலனாய்வு திணைகள (சி. ஐ. டி.) அதிகாரிகள் நேற்று வாக்குமூலம் பதிவு செய்தனர்.

"தமிழீழம்" என்று விளித்து அவர் தனது சமூகவலைத்தளத்தில் இட்ட பதிவு தொடர்பில் தென்னிலங்கையை சேர்ந்த அமைப்பு ஒன்று அளித்த முறைப்பாட்டுக்கு அமைவாகவே, அர்ச்சுனா சி. ஐ. டி. திணைக்களத்துக்கு அழைக்கப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

நேற்று 11

# இந்தியாவுடனான ஒப்பந்தம் எதிரான வழக்குகள் தள்ளுபடி

கொழும்பு, ஓக. 05


இலங்கை அரசுக்கும் இந்திய அரசுக்கும் இடையே கையெழுத்தான ஏழு புரிந்துணர்வு ஒப்பந்தங்களை இரத்து செய்ய உத்தரவிடக் கோரி தாக்கல் செய்யப்பட்ட இரண்டு அடிப்படை உரிமைகள் மனுக்களை உயர் நீதிமன்றம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளாமல் நேற்று திங்கட்கிழமை தள்ளுபடி செய்தது.

நீண்ட வாதங்களுக்குப் பிறகு, உயர் நீதிமன்ற 11

# அரியாலை புதைகுழி பகுதிகளில் ஸ்கான் பரிசோதனை ஆரம்பம்!

## தரையை ஊடுருவும் ஸ்கானுக்கு பாதுகாப்பு அமைச்சு அனுமதிக்கவில்லை

- பு. கஜிந்தன், த. பிரதீபன் -



யாழ்ப்பாணம், ஓக. 05

அரியாலை மனிதப் புதைகுழிகளுக்கு அண்மையான பகுதிகள் நேற்றைய தினம் ஸ்கான் செய்யப்பட்டது.

இதேநேரம், ஜி. பி. ஆர். ஸ்கானர் (தரையை ஊடுருவும் ராடர்) மூலம் பரந்துபட்ட ஸ்கான் சோதனைக்கு பாதுகாப்பு அமைச்சின் அனுமதி கிடைக்கவில்லை என்று தெரிய வருகிறது.

அரியாலை - சித்துப் பாத்தி - இந்து மயானத்தில் அகழப்படும் இரு மனிதப் புதைகுழிகள் தவிர, வேறேதேனும் புதைகுழிகள் அந்தப் பகுதியில் உள்ளனவா என்பதை அறியும் நோக்கிலேயே இந்த ஸ்கான் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

சிறீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்திலுள்ள ஸ்கானர் கருவியை யாழ். பல்கலைக்கழகம் ஊடாகப் பெறப்பட்டு, அந்தக் 11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டிஜிற்றல் பிறப்பு சான்றிதழ்கள் வவுனியாவில் வழங்கி வைப்பு

வவுனியா, ஒக. 05

வவுனியா மாவட்டத்தில் முதன்முறையாக டிஜிற்றல் பிறப்பு சான்றிதழ்கள் வழங்கும் ஆரம்ப நிகழ்வு மாவட்ட செயலகத்தில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்றது.

இந்தத் திட்டத்தின் கீழ், 2021 இற்கு பின்னர் நாட்டில் பிறந்த குழந்தைகள் புதிய பிறப்பு சான்றிதழ்களை பெற்றுக்கொள்ள முடியும்.

இந்தத் தேசிய பிறப்பு சான்றிதழ்கள் சிங்களம் அல்லது தமிழ் மொழிகளுடன் ஆங்கில மொழியிலும் அச்சிடப் பட்டுள்ளது.

நேற்றைய ஆரம்ப நிகழ்வில் 30 குழந்தைகளுக்கு பிறப்புச் சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் மாவட்ட செயலாளர் திரு. பி.ஏ. சரத்சந்ர, துணைப் பதிவாளர் நாயகம் ஆனந்தி ஜெயரட்ணம் மற்றும் பி. பிரபாகர், வவுனியா காணிப் பதிவாளர் கிருஷ்ணராஜ் லிசாந்தனி, வவுனியா பிரதேச செயலகத்தின் மேலதிக மாவட்டப் பதிவாளர் சசிகலா யோஜீஸ்வரன் உள்ளிட்டோர் பங்கேற்றனர். (ஐ-10)

# கிளிநொச்சி வளாகத்துக்கு பிரதமர் ஹரிணி வருகை!

கிளிநொச்சி, ஒக. 05

கிளிநொச்சி அறிவியல் நகரில் அமைந்துள்ள யாழ்ப்பாண பல்கலைக்கழக கிளிநொச்சி வளாகதுக்கு பிரதமர் ஹரிணி அமரசூரிய வருகை தந்தார்.

இதன்போது, பிரதமர், வளாகத்தின் பீடாதிபதிகள், துறைசார் நிர்வாகிகள், விரிவுரையாளர்கள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுடன் பல்கலைக்கழகத்தின் தேவைகள் மற்றும் பிரச்னைகள் தொடர்பில் கலந்துரையாடினார்.

அத்துடன், பிரச்னைகளுக் கான தீர்வுகளை ஆலோசித்து இனங்கண்ட பிரதமர், அவற்றை உடனடியாக நிறைவேற்றுவதாகவும் உறுதியளித்தார். (ஐ)

# காற்றாலை திட்டத்தை அமுலாக்க ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம்

## ரவிகரன் எம். பி. மன்னாரில் தெரிவிப்பு

மன்னார், ஒக. 05

மன்னார் மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் காற்றாலைத் திட்டத்தை அமுல்படுத்துவதற்கு ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம் என்று வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

காற்றாலை மின் திட்டத்துக்கு எதிராக நேற்றைய தினம் மன்னார் நகரில் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தில் பங்கேற்றபோதே அவர் இவ்வாறு கூறினார்.

மேலும், "காற்றாலை கனிய மணல் திட்டம் என எமது மக்களுக்கு மிகமோசமான செயல் திட்டங்களை முன்னைய அரசாங்கங்கள் மேற்கொண்டன. தற்போதைய அரசாங்கம் மக்களின் நன்மை கருதி இத்தகைய காற்றாலை, கனிய மணல் திட்டங்களுக்கு எதிராக செயல்படுவார்களென்று மக்கள் எதிர்பார்த்திருக்கையில், இந்த அரசாங்கமும் மக்களுக்கு பாதிப்பு ஏற்படக்கூடிய திட்டங்களுக்கு ஆதரவாகச் செயல் படுவதை அவதானிக்க முடிகின்றது.

குறிப்பாக, மக்களின் அனுமதியின்றி - விருப்பின்றி இத்தகைய காற்றாலை திட்டங்கள் அமுல்படுத்தப்படாது என்று மாவட்ட மற்றும் பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள் உட்பட பல சந்தர்ப்பங்களில் தெரிவித்திருக்கின்றனர். ஆனால், தற்போது மக்கள் அனுமதிக்காத, மங்கள் விரும்பாத இந்தக் காற்றாலை திட்டத்தை மன்னாரில் அமுல்படுத்த முனைகின்றனர்.

இதேபோன்று, மக்களின் எதிர்ப்பையும்மீறி முல்லைத்தீவு - கொக்கிளாயில் கனியமணல் அகழ்வுச் செயல்பாடு முன்னெடுக்கப்பட்டது. அவ்வாறு கனியமணல் அகழ்வு மேற்கொள்ளப்பட்டதன் விளைவாக கடலரிப்பு ஏற்பட்டு கடல்நீர் குடியிருப்புப் பகுதிகளை நோக்கி வந்த அவலநிலையே ஏற்பட்டிருந்து. மக்கள் அனுமதிக்காத திட்டங்களை அமுல் படுத்தமாட்டோம் எனக் கூறிவிட்டு எந்த அடிப்படையில் இவ்வாறான திட்டங்களை இங்கு அமுல்படுத்த முனைகின்றனர்.

மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் இத்தகைய திட்டங்களை ஒருபோதும் அமுல் படுத்த நாம் இடமளியோம் - என்றார். (ஐ)

# 25 பவுண் நகைகள் திருட்டு; சந்தேகநபர் ஒருவர் கைது!



வவுனியா, ஒக. 05

இருபத்தைந்து அரைப் பவுண் நகைகளை திருடிய குற்றத்தில் சந்தேகநபர் ஒருவர் நேற்று திங்கட்கிழமை கைது செய்யப்பட்டார் என்று வவுனியா பொலிஸார் தெரிவித் துள்ளனர்.

வவுனியா, சோயா வீதியில் வீடு ஒன்றில் ஒரு வாரத்துக்கு முன்னர் திருட்டு இடம்பெற்றது. இது தொடர்பில் வவுனியா மாவட்ட தலைமை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதன்படி, பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஜெயக்கொடியின் வழிகாட்டில் குற்றத் தடுப்பு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர்.

இந்தத் திருட்டுச் சம்பவம் தொடர்பில் ஓமந்தையை சேர்ந்த 33 வயதான இளைஞர் ஒருவர் சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்டார்.

அவரிடம் நடத்தப்பட்ட விசாரணைகளில் தாலிக்கொடி, சங்கிலி, காப்பு, மோதிரம் என இருபத்தைந்து அரைப் பவுண் நகைகள் மீட்கப்பட்டன.

மேலதிக விசாரணைகளின் பின்னர் சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ-10)

# செம்மணிக்கு நீதி கிடைக்க சகலரும் ஒன்றாக வேண்டும்

## அருட்தந்தை சக்திவேல் அழைப்பு

கொழும்பு, ஒக. 05

செம்மணி புதைகுழி நீதிக்காக பிளவுகளை உண்டு பண்ணும் அரசியலை தவிர்த்து தமிழ் தேச மக்களாக எழுந்து நிற்க அரசியல் தலைமைகள் ஒன்றுபட வேண்டும் - இவ்வாறு அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப் பாளர் அருட்தந்தை மா. சக்திவேல் தெரிவித்துள்ளார்.

நேற்று அவர் விடுத்துள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், செம்மணி - அரியாலை புதைகுழியில் இருந்து தினமும் அகழ்ந்தெடுக்கப்படும் மனித எச்சங்கள் மனித உள்ளம் கொண்டவர்களை அதிர்ச்சிகுள்ளும் ஆழ்ந்த வேதனைக்குள்ளும் தள்ளுவதோடு படுகொலை செய்யப்பட்டோரின் அவலக் குரல் நீதியை தேடும் மக்களின் இதயத்தை தட்டிக் கொண்டிருக்கையில் கிருஷாந்தி குமாரசாமி கொலை வழக்கில் தண்டனை அனுபவிக்கும் சோமரத்ன ராஜபக்ஷவின் மனைவி ஜனாதிபதி, பிரதம மந்திரி, நீதி அமைச்சர் ஆகியோருக்கு அனுப்பி உள்ள சர்வதேச விசாரணைக்கான கடிதம் பேரினவாத இன அழிப்புக்கும் இனப்படுகொலைக்கும் துணை நிற்கும் இலங்கையின் நீதித் துறை, அரசியல் அதிகாரம், அரசியல் கட்டமைப்பு தமிழர்களுக்கு நீதியை நிலைநாட்டப் போவதில்லை என்பதை சர்வ தேசத்துக்கு வெளிப்படுத்தியுள்ளது.

தமிழ் அரசியல் தலைமைகள் சர்வதேச விசாரணைக்கான ஒரு துருப்புச்சீட்டாக சோமரத்னவின் மனைவி ஜனாதிபதிக்கு எழுதியுள்ள கடிதத்தை பாவித்து சர்வதேசத்துக்கு ஒருமித்த குரலோடு அழுத்தம் கொடுக்க வேண்டும். பிளவுகளை உண்டு பண்ணும் அரசியலை தவிர்த்து தமிழ் தேச மக்களாக எழுந்து நிற்க அரசியல் தலைமைகள் ஒன்று பட வேண்டும் - என்று கூறப் பட்டுள்ளது. (ஐ)

# நல்லூர் ஆலய சூழலில் இன்று!

யாழ்ப்பாணம், ஒக. 02

இலங்கை இளங்கலைஞர் மன்றம், நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபமும் இணைந்து நடத்தும் தெய்வீக இசையரங்கு இன்று மாலை 6.45 மணி தொடக்கம் நல்லூர் துர்க்கா தேவி மணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இசையரங்கு நிகழ்ச்சியில், பாட்டு - கமலகாந்தன் வர்ஜிகன், வயலின் - இராசரத்தினம் நிரோசன், மிருதங்கம் - அருமைநாதன் சண்முகப்பிரியன், முகர்சிங் - நித்தியானந்தன் மோகனதர்சன், நாட்டிய அரங்கு நிகழ்ச்சியில் லஜ நாட்டியா நடனப்பள்ளி மாணவர்களின் நடனம் இடம்பெறும். நட்டுவாங்கம் - திருமதி லஜந்தா குணா, பாட்டு - கந்தசாமி கஜீபன், மிருதங்கம் - கனகசபை சிவகுமார், வயலின் - குமரேசன் சயந்தன் ஆகியோர் பங்கேற்பர். (ஐ)



கோப்பாய் ஆசிரியர் கலாசாலை இல்ல மெய்வன்மை போட்டி கடந்த வியாழக்கிழமை கலாசாலையின் மைதானத்தில் அதிபர் ச.லலீசன் தலைமையிலும் உடற்கல்வித்துறை விரிவுரையாளர் பா.பாஸ்கரனின் ஒழுங்கமைப்பிலும் நடைபெற்றது. இதன்போது, கலாசாலையின் முன்னாள் உடற்கல்வித்துறை விரிவுரையாளர் க. அன்பரசி பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
05.08.2025 செவ்வாய்க்கிழமை
விசுவாவசு வருடம், ஆடி 20

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான வரப்பிரசாதங்கள்

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் பல மாற்றங்களுக்காக முயற்சித்து வருகிறது. ஊழல் மற்றும் துஷ்பிரயோகங்களை தடுப்பது. அத்துடன், அரச செலவீனங்களை குறைப்பது போன்ற விடயங்களில் செயல்பட்டு வருகிறது. அந்த அடிப்படையில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான ஓய்வூதியத்தையும் இரத்துச் செய்வதாகத் தெரிவித்துள்ளது. இந்த அடிப்படையில் தற்போது பாராளுமன்ற உறுப்பினர்களாக இருப்பவர்கள் - முன்னர் பாராளுமன்ற உறுப்பினர்களாக இருந்தவர்கள் ஆகியோர் ஓய்வூதியம் பெறும் தகுதியற்றவர்களாகுவர்.

இது தொடர்பில், ஜே.வி.பியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் நந்தன குணதிலக, அவ்வாறான நிலைமை ஏற்பட்டால் தான் தற்கொலை செய்ய வேண்டிவரும். ஆனால், தான் தனியாக இறக்கப் போவதில்லை. ஏனெனில், நான் ஒரு கெரில்லா போராளி என்றும் அவர் தெரிவித்திருக்கிறார். ஓய்வூதியத்தை நிறுத்தினால் இந்த வயதில் தன்னைப் போன்றவர்கள் எங்கு பணியாற்றி வருமானத்தைப் பெறுவது, இந்த வயதில் தங்களுக்கு யார் வேலை தருவார் என்றும் அவர் கேள்வி எழுப்பியிருக்கிறார்.

மக்களால் மக்களுக்கு சேவை செய்வதற்காக தெரிவு செய்யப்படுபவர்களுக்கு விசேட சலுகைகள் வழங்கக்கூடாது என்பது ஒரு வாதமாக இருந்தாலும் அவ்வாறானவர்களுக்கான ஓய்வூதியத்தைக்கூட இல்லாமலாக்குவது என்பது சரியானதா என்னும் கேள்வியையும் சாதாரணமாக தட்டிக்கழிக்கவும் முடியாதுதான். சாதாரணமாக தற்போதைய சூழலில் ஒருவர் தேர்லில் வெற்றி பெற வேண்டும் என்றால் அவர் பெருமளவு பணம் செலவழிக்க வேண்டியிருக்கிறது. சாதாரணமானவர்கள் தேர்தலில் போட்டியிட முடியாத நிலைமை காணப்படுகிறது.

இவ்வாறான சூழலில், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எவ்வித சலுகைகளும் இல்லை என்னும் நிலைமை ஏற்பட்டால் படித்த, சமூக நோக்குள்ள எவருமே எதிர்காலத்தில் தேர்தல் அரசியலை நோக்கி வரமாட்டார்கள். தற்போதே அவ்வாறான நிலைமைதான் காணப்படுகிறது.

தமிழ் சூழலைப் பொறுத்தவரையில் தேசிய நோக்கு, உரிமை என்னும் சொற்களை அரசியல் முதலீடாகக் கொண்டிருக்கும்போதே தேர்தலில் பணம் பெரும் செல்வாக்குச் செலுத்துகிறது. பணமில்லாதவர் அரசியலில் பிணம் என்னும் நிலைமை காணப்படும்போது, பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எவ்வித சலுகைகளும் இல்லையென்னும்போது, எதிர்காலத்தில் பணமில்லாதவர்கள் - அவர்கள் எவ்வாறான தகுதிகளைக் கொண்டிருந்தாலும்கூட, தேர்தல் அரசியலை எண்ணிப் பார்க்க முடியாத நிலைமையே ஏற்படும். இடதுசாரி பாரம்பரியத்திலிருந்து வந்த ஜே. வி. பி. ஜனநாயகத்தை முதலாளிகளுக்கானதாக மாற்றிவிடும் காரியத்தையே செய்துவிட்டுப் போகப் போகின்றதா?

அதற்கு பதிலாக பண பலமுள்ளவர்கள் மட்டுமே தேர்தலில் போட்டியிட முன்வருவார்கள். இவ்வாறான நிலையில் ஜனநாயகம் என்பதே பணமுள்ளவர்களுக்கான ஒன்றாக மட்டுமே இருக்க முடியும். மேற்குலக நாடுகளைப் பொறுத்தவரையில் தேர்தலில் போட்டியிடுபவர்கள் நன்கொடைகளை பெறுவார்கள். இலங்கையில் அவ்வாறான நிலைமையை கற்பனையும் செய்ய முடியாது.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களில் வசதியுள்ளவர்களும் இருக்கின்றனர் - சாதாரண நிலையிலுள்ளவர்களும் இருக்கின்றனர். அவ்வாறானவர்களுக்கு ஓய்வூதியம் அத்தியாவசியமான ஒன்றாக இருக்கக்கூடும். மாற்றங்கள் தேவை. ஆனால், அவ்வாறான மாற்றங்களைத் தடாலடியாக மேற்கொள்வது பொருத்தமானதாக இருக்குமா?

# வேலணையில் பொது மைதானம் அதிகாரிகள் நேற்று களஆய்வு!

யாழ்ப்பாணம், ஒக. 05

வேலணையில் நவீன வசதிகளுடன் கூடிய பொது விளையாட்டு மைதானம் அமைப்ப தற்கான இடத்தை துறைசார் அதிகாரிகள் நேரில் சென்று கள ஆய்வை நேற்று திங்கட் கிழமை மேற்கொண்டனர்.

பொது மைதானத்துக்கான இடம் வேலணை - அராலி சந்தி பகுதியில் 4 ஏக்கர் காணியை வழங்குவதற்கு இணக்கம் எட்டப்பட்டிருந்த நிலையில் அந்த இடத்தில் நேற்றைய தினம் கள ஆய்வு இடம்பெற்றது.



இதில், வேலணை பிரதேச சபையின் தவிசாளர், வேலணை பிரதேச சபையின் செய லாளர் ஆகியோருடன் வேலணை பிரதேச செயலக அதிகாரிகள், நீர்ப்பாசன திணைக்கள அதிகாரிகள், காணி அதிகாரி மற்றும் துறைசார் அதிகாரிகள் பங்கேற்றிருந்தனர்.

இலங்கை நீர்ப்பாசன திணைக்களத்தின் அதிகார எல்லைக்குள் அராலி சந்தியில் இருக்கும் அரச காணியை வேலணை பிரதேசம் மட்டுமல்லாது தீவகம் முழுவது மான விளையாட்டு துறையின் நலன்கருதி தூரநோக்குள்ள பார்வையுடன் சில வரையறைகளுடன் குறித்த நிலப்பரப்பை வழங்குவதற்கு நீர்ப்பாசன திணைக்களம் இணக்கம் தெரிவித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

அத்துடன், விளையாட்டு மைதானத்தை அமைப்பதற்கான திட்ட முன்மொழிவுடன் கூடிய பொறிமுறைகளை தயாரித்து துறை சார் வழிமுறைகளூடாக அதை சமர்ப்பிக்கு மாறு வேலணை பிரதேச சபைக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

வேலணை பிரதேசத்தின் விளையாட்டுத் துறையை மெருகூட்டும் செயற்றிட்டத்தின் தொடர் நடவடிக்கையாக பொது மைதானம் ஒன்றை அமைப் பதற்கான நடவடிக்கை வேலணை பிரதேச சபையால் கடந்த 2018 ஆம் ஆண்டுமுதல் பல்வேறு வழிகளில் முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-05)

## சந்நிதியான் ஆச்சிரமத்தில் அருளுரையும் உதவி வழங்கலும்

வடமராட்சி, ஒக. 05

சந்நிதியான் ஆச்சிரம சைவ, கலை, பண்பாட்டு பேரவையின் ஏற்பாட்டில் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் வாராந்த ஆன்மீக அருளுரை அண்மையில் நடைபெற்றது.

இதில், "ஞானவேல்" என்ற தலைப்பில் சித்த மருத்துவத்துறை மருந்தாளர் த. தவநேசன் அருளுரை ஆற்றினார்.

இதன்போது, அளவெட்டி அருணாசலம் வித்தியாலயத்தின் கோரிக்கைக்கு அமைவாக மாணவர்களுக்குக் கழுத்துப் பட்டி வழங்குவதற்காக 50 ஆயிரம் ரூபாய் வழங்கி வைக்கப்பட்டது. (ஐ-02)

# காற்றாலை மின் திட்டத்துக்கு எதிராக மன்னாரில் போராட்டம்


மன்னார், ஒக. 05

மன்னார் தீவு பகுதியில் அமைக்கப்பட வுள்ள காற் றாலை மின் திட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று போராட்டம் நடைபெற்றது.

மன்னார் மாவட்ட செய லகம் முன்பாக நேற்று திங் கட்கிழமை இந்தப் போராட் டம் நடைபெற்றது. மன் னார் பொது அமைப்புகளின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப் பட்டது.


மன்னார் மக்களுக்கு பாதிப்புகளை தரும் இந்தக் காற்றாலை மின் திட்டத்தை நிறுத்துமாறு போராட்டக் காரர்கள் வலியுறுத்தினர்.

இந்த நிகழ்வில் பொதுமக்கள், பொது



அமைப்புகளின் பிரதிநிதிகள், மக்கள் பிரதிநிதிகள் எனப் பலர் பங்கேற்றனர். (ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓகஸ்ட் - 05 செவ்வாய்கிழமை
விசுவாவசு வருடம் - ஆடி 20
நல்ல நேரம் : 7.31 - 9.00
ராகு காலம் : 3.00 - 4.30
திதி: துவாதசி




**மேடம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் ஒரே நாளில் முக்கியமான நான்கைந்து வேலைகளை பார்க்க வேண்டி வரும். நெருங்கியவர்கள் சிலர் உங்களை உதாசீனப்படுத்தி பேசுவார்கள்.

**இடபம்**
தன்னம்பிக்கையுடன் எதையும் செய்யத் தொடங்குவீர்கள். பிள்ளைகளால் மதிப்பு கூடும். கல்யாண பேச்சு வார்த்தை வெற்றியடையும். மனைவி வழியில் ஆதரவு பெருகும்.

**மிதுனம்**
குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்பு கூடும். அதிகார பதவிகளில் நட்பு கிடைக்கும். அரசால் ஆதாயம் உண்டு. வழக்கில் நல்ல தீர்ப்பு வரும். பழைய சொந்த பந்தம் தேடி வரும்.

**கடகம்**
குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். ஆடம்பர செலவுகளை குறைத்து சேமிக்கத் தொடங்குவீர்கள். உங்களை சுற்றி இருப்பவர்களின் சுயரூபம் தெரிய வரும்.

**சிம்மம்**
திட்டமிட்ட காரியங்களை சிறப்பாக முடிப்பீர்கள். தாய்வழி உறவினர்களுடன் மனஸ்தாபம் வந்து நீங்கும். பயணங்களால் அலைச்சல் இருந்தாலும் ஆதாயமும் உண்டு.

**கன்னி**
குடும்பத்தாரின் விருப்பங் களை நிறைவேற்றுவீர்கள். சிலர் உங்கள் உதவியை நாடுவார்கள். சகோதர வகையில் நன்மை உண்டு. பூர்வீக சொத்து பிரச்னைக்கு தீர்வு கிடைக்கும்.

**துலாம்**
கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்தி வரும். புதிய நட்பால் உற்சாகமடைவீர்கள். வெளிவட்டாரத்தில் மகிழ்ச்சித் தங்கும்.

**விருட்சிகம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் செலவுகளை குறைக்க முடியாமல் திணறுவீர்கள். குடும்பத்தா ரின் உணர்வுகளை புரிந்து செயல்படுவீர்கள். வியாபாரத்தில்ரகசியங்களை வெளியிட வேண்டாம்.

**தனுசு**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் செலவுகளை குறைக்க முடியாமல் திணறுவீர்கள். குடும்பத்தாரின் உணர்வுகளை புரிந்து செயல்படுவீர்கள். பொறுமை தேவைப்படும் நாள்.

**மகரம்**
குடும்பத்தாரின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். வெளிவட்டாரத்தில் செல்வாக்கு கூடும். சொந்த பந்தங்களில் சிலர் கேட்ட உதவியை செய்வீர்கள்.

**கும்பம்**
உங்கள் செயலில் வேகம் கூடும். உடன்பிறந்தவர்களால் பயனடைவீர்கள். விருந்தினரின் வருகை உண்டு. உங்களால் வளர்ச்சியடைந்த சிலரை சந்திக்க நேரிடும். கௌரவம் கூடும் நாள்.

**மீனம்**
எதிர்பாராத இடத்திலிருந்து உதவிகள் கிடைக்கும். விருந்தினர்களின் வருகையால் வீடு களைக் கட்டும். குடும்பத்தில் ஒற்றுமை பிறக்கும். பணப்புழக்கம் கணிசமாக உயரும்.

# நல்லூர் கந்தன் உற்சவகால அருளுரை

யாழ்ப்பாணம், ஓக. 05

சிவகுரு ஆதீனத்தின் ஏற்பாட்டில் சிவகுரு ஆதீன முதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகளால் நல்லூர் கந்தன் கொடியேற்றம் முதல் தீர்த்தோற்சவம் வரை தினமும் இரவு 08. 00 மணி முதல் 08. 30 மணி வரை சிவகுரு ஆதீன மண்டபத்தில் அருளுரை நடத்தப்படுகின்றது.

இன்று செவ்வாய்க்கிழமை "எப்போது அருள்வாய் ?" என்ற தலைப்பிலும் நாளை புதன்கிழமை "நடந்து நடந்து பாடுவோம்" என்ற தலைப்பிலும் அருளுரை நடைபெறவுள்ளது. (எ)

# நல்லூரில் தெய்வீகத் திருக்கூட்ட நிகழ்வு

யாழ்ப்பாணம், ஓக. 05

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர் கந்தசுவாமி தேவஸ்தான வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு நல்லைத் திருஞான சம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்தில் நடத்தும் தொடர் தெய்வீகத் திருக்கூட்ட நிகழ்வில் 06 ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை மாலை திருக்கயிலாய பரம்பரை சிறீ கந்தப்பரம்பரை சூரியனார் கோவில் ஆதீன சிறீ கார்யம் தவத்திரு சிறீமத் சிவாக்கர தேசிய சுவாமிகள் அருளுரை வழங்கி சிறப்பித்தார். (எ)




# வவுனியாவில் இஸ்லாமிய கலாசார மண்டபத்துக்கான அடிக்கல் நாட்டல்


வவுனியா, ஓக. 05

வவுனியா, குருமன்காடு காளி கோவிலுக்கு அருகாமையில் இஸ்லாமிய கலாசார மண்டபத்துக்கான அடிக்கல் நேற்று முன்தினம் நாட்டி வைக்கப் பட்டது.

வவுனியா, குருமன்காடு காளி கோவிலுக்கு அருகாமையில் இஸ்லாமிய கலாசார மண்டபம் அமைப்பதற்கு பட்டாணிச்சூர் புளியங்குளம் பகுதியில் வசித்து வரும் இஸ்லாமிய மக்கள் பல வருடங்களாக முயற்சிகளை மேற்கொண்ட போதும் காணி விடுவிப்பு மற்றும் நகர சபையின் அனுமதி மறுப்பு போன்ற பல்வேறு காரணங்களால் கட்டடம் அமைக்க முடியாத நிலை காணப்பட்டது.

தற்போது அதற்கான அனுமதிகள் அனைத்தும் பெறப்பட்டு இஸ்லாமிய கலாசார மண்டபம் அமைப்பதற்கான வேலைகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க, பாராளுமன்ற உறுப்பினர்களான கே. காதர் மஸ்தான், முத்து முகமது, மாநகர சபை உறுப்பினர்களான முனாவர், பர்சான், அப்துல் பாரி, எம். லரீவ், மௌலவிகள், உலமாக்கள், வர்த்தகர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (எ-10)



# சி. ஐ. டியினரை பின் தொடர்ந்த கடற்படை புலனாய்வு பிரிவினர்

## பருத்தித்துறையில் சம்பவம், நீதிமன்றில் முறையீடு

யாழ்ப்பாணம், ஓக. 05

யாழ். பருத்தித்துறையில் காணாமல் போன நபர்கள் குறித்து விசாரிக்கச் சென்ற குற்றப் புலனாய்வுத் துறை அதிகாரிகளை கடற்படை புலனாய்வுப் பிரிவினர் பின் தொடர்ந்து வருவதாக குற்றப் புலனாய்வுத்துறையினர் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளனர்.

பருத்தித்துறையில் காணாமல்போனவர் தொடர்புடைய ஒரு விடயத்தை விசாரிக்க தங்கள் துறை அதிகாரிகள் சென்றபோது இரண்டு மோட்டார் சைக்கிள்களில் நான்கு நபர்கள் அவர்களைப் பின் தொடர்ந்ததாகவும் அவர்களை நிறுத்தி சோதனை செய்ததில் அவர்கள் கடற்படை புலனாய்வுப் பிரிவினர் என்பது உறுதி செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் குறித்த கடற்படை புலனாய்வுப் பிரிவினரிடம் விசாரணை செய்த போது குற்றப் புலனாய்வுப் பிரிவினரை பின் தொடருமாறு கடற்படை புலனாய்வுப் பிரிவின் லெப்டினன்ட் கமாண்டர் உத்தரவு பிறப்பித்ததாக அவர்கள் குற்றப் புலனாய்வுத் துறை அதிகாரிகளிடம் தெரிவித்ததாக நீதிமன்றத்தின் கவனத்துக்கு கொண்டு வந்துள்ளனர். (எ)

# யாழ். பொது நூலகம் எரிப்பு ஈடுசெய்ய முடியாத இழப்பு

## பிரதமர் ஹரிணி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 05

யாழ்ப்பாணம் பொது நூலகம் எரிக்கப்பட்டதனால் ஏற்பட்ட இழப்பு ஈடுசெய்ய முடியாதது என்று பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் பொது நூலகத்தை நேற்று முன்தினம் பார்வையிட்ட பிரதமர், அங்கு வருகை தந்திருந்த மாணவர்களுடன் சுமுகமாகக் கலந்துரையாடினார்.

இதன்போது,யாழ்ப்பாணம் பொது நூலகம் எரிக்கப்பட்டதனால் ஏற்பட்ட இழப்பு ஈடுசெய்ய முடி யாதது. தற்போதைய அரசாங் கத்தின் கீழ் யாழ்ப்பாணம் பொது நூலகத்தை மேலும் அபிவிருத்தி செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் பிரதமர் தெரிவித்தார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாட்டு இருப்புக்களை பாதிக்கும் வாகன இறக்குமதி

கொழும்பு, ஒக. 05

எதிர்வரும் மாதங்களில் அதிக வாகனங்களுக்குக் கேள்வி ஏற்பட்டால், அவை வெளிநாட்டு இருப்புக்களை பாதிக்குமாக இருந்தால் மாற்று ஏற்பாடுகளுக்குச் செல்லவேண்டியிருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது, அடுத்த பாதீட்டில் வாகன இறக்குமதி மற்றும் வாகன நிதி வசதிகள் மீதான வரிகளை அதிகரிப்பது குறித்து நிதி அமைச்சு பரிசீலிக்க வேண்டியிருக்கும் என திறைசேரி அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டு பெப்ரவரி மாதம் வாகன இறக்குமதி தொடர்பான கட்டுப்பாடுகள் அகற்றப்பட்டதன் பின்னர் இறக் ஸ்ரீகுமதியாளர்கள் 1.2 பில்லியன் அமெரிக்க டொலர் மதிப்புள்ள நாணயக் கடிதங்களைத் திறந்துள்ளனர்.

அவற்றில் 550 மில்லியன் அமெரிக்க டொலர் மதிப்புள்ள நாணயக் கடிதங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளன.

மிகுதியானவை நிலுவையில் உள்ளதாகவும் அந்த அதிகாரி குறிப்பிட்டார்.

தற்சமயம் வெளிநாட்டு இருப்பு சுமார் 6 பில்லியன் அமெரிக்க டொலராக உள்ளன.

இந்த நிலையில், வாகன இறக்குமதி மூலம் வெளிநாட்டு இருப்பு பாதித்தால் அதற்கு எதிராக சில நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய நிலை ஏற்படும் எனவும் அந்த அதிகாரி சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த ஆண்டு பெப்ரவரி மாதம் முதல் தனிப்பட்ட பாவனைக்காக சுமார் 30,000 வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன என்றும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார். (அ)

# சுற்றுலா பயணிகள் வருகையால் 3.7 பில்லியன் டொலர் வருமானம்!

## அமைச்சர் விஜித ஹேரத் தகவல்

கொழும்பு, ஒக. 05

**கடந்த 6 மாதங்களில் சுற்றுலாப் பயணிகளின் வருகை மூலம் 3.7 பில்லியன் டொலர் வருமானம் ஈட்டப்பட்டுள்ளதாக அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.**

இந்த வருட இறுதிக்குள் மற்றுமொரு வருமான இலக்கு 3.7 பில்லியன் டொலரை எட்டும் என்று அவர் குறிப்பிட்டார்.

நுவரெலியா சீதை அம்மன் கோயிலில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் விஜித ஹேரத் இந்த விடயத்தை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-இலங்கைக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளில் இந்தியர்கள்தான் அதிக அளவில் உள்ளனர். பலர் மத ரீதியாக சுற்றுலா நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர்.

கோனேஷ்வரம் ஆலயம், கதிர்காமம் போன்ற பல்வேறு இடங்களைக் காண ஏராளமான இந்திய சுற்றுலாப் பயணிகள் வருகிறார்கள். அது எங்களுக்கு மிகப்பெரிய பலம்.

சீதையம்மன் ஆலயத்தின் அபிவிருத்திப் பணிகளுக்கு எமது அரசாங்கம் முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதற்கு தயாராக இருக்கின்றது.

நாம் பொருளாதாரத்தில் வங்குரோத்து நிலையை அடைந்திருந்தோம் என்பது உங்களுக்கு தெரியும். இந்த நிலையிலிருந்து வெளியேற, சுற்றுலாத் துறையை விரைவாக மேம்படுத்த வேண்டும்- என்றார்.

(அ)

# கொழும்பு பங்கு சந்தை சாதனை

கொழும்பு, ஒக. 05

கொழும்பு பங்குச் சந்தையின் அனைத்து பங்கு விலைச் சுட்டெண் நேற்று வரலாற்றில் முதல் முறையாக 20,000 புள்ளிகளைத் தாண்டியுள்ளது.

கொழும்பு பங்குச் சந்தையின் கூற்றுப்படி நேற்று காலை வர்த்தகத்துக்காக கொழும்பு பங்குச் சந்தை திறக்கப்பட்ட 10 நிமிடங்களுக்குள் இந்த மைல்கல் எட்டப்பட்டது.

அந்த நேரத்தில், பதிவு செய்யப்பட்ட பரிவர்த்தனை வருவாய் ரூ. 432 மில்லியனைத் தாண்டியதாக கொழும்பு பங்குச் சந்தை தெரிவித்துள்ளது.

(அ)

# தேங்காயின் விலை மீண்டும் அதிகரிப்பு

கொழும்பு, ஒக. 05

நாட்டில் தேங்காய் விலை மீண்டும் அதிகரித்துள்ளதாக நுகர்வோர் தெரிவித்துள்ளனர்.

அதன்படி, சாதாரண அளவிலான தேங்காய் ஒன்றின் சில்லறை விலையில் 185 முதல் 205 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது.

அத்துடன், சிறிய தேங்காய் ஒன்று 160 முதல் 190 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது.

முன்னதாக, பொருட்கள் விலை குறைப்பை எதிர்வரும் 3 வருடங்களுக்கு மேற்கொள்ள முடியாது என, வீடமைப்பு பிரதியமைச்சர் டி.பி.சரத் தெரிவித்திருந்தார்.

இந்தநிலையிலேயே, அத்தியாவசிய பொருட்களின் விலை அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# கொழும்புத் துறைமுகத்துக்கு 6 மாதங்களில் அதிக இலாபம்

கொழும்பு, ஒக. 05

2025 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் இலங்கை துறைமுக அதிகாரசபை 66 வீத இலாபத்தை பதிவு செய்துள்ளதாக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது.

2024 ஆம் ஆண்டில் இதே காலகட்டத்தில் இலங்கை துறைமுக அதிகார சபை 14,691 மில்லியன் ரூபாவினை இலாபமாக பதிவு செய்தது.

இந்தநிலையில் இந்த ஆண்டில் முதல் 6 மாதங்களில் அந்த தொகை 24,418 மில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளது.

இந்த உயர்வுக்கு பெரும்பாலும் கொழும்பு துறைமுகத்தில் அதிகரித்த சரக்கு கையாளுதல் மற்றும் மேம்பட்ட செயல்திறன் காரணமாகும் என அமைச்சு தெரிவித்துள்ளது.

ஆண்டின் முதல் பாதியில், கொழும்பு துறைமுகம் 4 மில்லியனுக்கும் அதிகமான இருபது அடிக்கு சமமான கொள்கலன்களை கையாண்டது.

அந்த எண்ணிக்கை 2025 ஆம் ஆண்டின் இறுதிக்குள் 8 மில்லியன் கொள்கலன்களைத் தாண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தநிலையில், தெற்காசியாவின் முக்கிய கடல்சார் மையமாக கொழும்பு துறைமுகம் தமது நிலையை வலுப்படுத்தி வருவதாகவும் அந்த அமைச்சு தெரிவிக்கின்றது. (அ)

# யோஷித, டெய்சி ஆகியோருக்கு எதிரான விசாரணை ஒத்திவைப்பு

கொழும்பு, ஒக. 05

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மகன் யோஷித ராஜபக்ஷ மற்றும் அவரது பாட்டி டெய்சி பொரெஸ்ட் ஆகியோருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணைகளை எதிர்வரும் ஒக்ரோபர் 29 ஆம் திகதி வரை ஒத்திவைக்க கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குறித்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது பிரதிவாதிகள் நீதிமன்றத்தில் முன்னிலையாகியிருந்தனர்.

எனினும், இந்த வழக்கை விசாரிக்கும் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி பிரதீப் அபேரத்ன நேற்று விடுமுறையில் உள்ளதால், வழக்கை ஒக்ரோபர் 29 திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ள நீதிமன்றம் உத்தரவிட்டது.

2009 மார்ச் 31 முதல் 2013 டிசெம்பர் 12 ஆம் திகதிக்கு இடைப்பட்ட காலப்பகுதியில், முறைகேடாக ஈட்டிய 59 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான பணத்தை 3 தனியார் வங்கிக் கணக்குகளில் நிலையான வைப்பு கணக்குகளில் வைப்பு செய்ததன் மூலம், பணச் சலவை தடுப்புச் சட்டத்தின் கீழ் குறித்த பிரதிவாதிகளுக்கு எதிராக மூன்று குற்றச்சாட்டுக்களின் கீழ் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(அ)

# மாரவில கடற்கரைப் பகுதியில் இரு தரப்பினரிடையே தகராறு!

கொழும்பு, ஒக. 05

மாரவில, முதுகடுவ கடற்கரை பகுதியில் இரு தரப்பினரிடையே ஏற்பட்ட தகராறின் போது கூர்மையான ஆயுதத்தால் தாக்குதலுக்குள்ளாகி ஒருவர் உயிரிழந்துள்ளதோடு இருவர் காயமடைந்துள்ளனர்.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். உயிரிழந்த நபர் மாரவில பகுதியைச் சேர்ந்த 32 வயதுடையவர் என தெரியவந்துள்ளது.

இரு தரப்பினரிடையே ஏற்பட்ட தகராறின்போது தாக்குதலுக்குள்ளாகி காயமடைந்த மூவரை மாரவில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

சந்தேக நபர்களைக் கைது செய்ய மாரவில பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(அ)

# ஆறு மாத ஊழல் தடுப்பு நடவடிக்கையில் முன்னாள் அமைச்சர் உட்பட 29 பேர் கைது

கொழும்பு, ஒக. 05

இலங்கையின் இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணையகம் கடந்த ஆறு மாதங்களில் முன்னாள் அமைச்சரவை அமைச்சர், அவரது மனைவி, குழந்தைகள் மற்றும் நெருங்கிய உறவினர்கள் உட்பட 29 நபர்களைக் கைது செய்துள்ளது.

இலஞ்சம், சட்டவிரோத சொத்து குவிப்பு மற்றும் அதிகார துஷ்பிரயோகம் ஆகிய குற்றச்சாட்டுகள் தொடர்பான விசாரணைகளின்போது குறித்த அனைவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பல புலனாய்வுப் பிரிவுகள் மூலம் இவர்கள் கைதுகள் செய்யப்பட்டதாக லஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணையகம் தெரிவித்துள்ளது.

சிறப்பு புலனாய்வு பிரிவு: 7 நபர்கள்

ரகசிய புலனாய்வு பிரிவு: 1 தனிநபர்

சொத்து விசாரணை பிரிவு: 2 நபர்கள்

திறந்த புலனாய்வு பிரிவு: 5 நபர்கள்

முன்னாள் அமைச்சரின் மகன், மருமகன் மற்றும் இரண்டு மகள்கள்.

முன்னாள் அமைச்சக செயலாளர் மற்றும் கூடுதல் செயலாளர்.

மூன்று முன்னாள் நிறுவனத் தலைவர்கள், ஒரு நிறுவனத் தலைவர் மற்றும் நான்கு முன்னாள் உள்ளூராட்சிச் சபை தலைவர்கள்.

முன்னாள் மாகாண எதிர்க்கட்சித் தலைவர், முன்னாள் மாகாண முதலமைச்சர், முன்னாள் மாகாண தலைமைச் செயலாளர் மற்றும் மாகாண துணைச் செயலாளர்.

முன்னாள் மோட்டார் போக்குவரத்து துணை ஆணையர், மேலாண்மை உதவியாளர், ஒரு சிறப்பு மருத்துவர், நீதித் துறை அதிகாரி மற்றும் ஒரு எழுத்தாளர்.

கைது செய்யப்பட்டவர்களைத் தவிர, நாடு முழுவதும் உயர்நீதிமன்றங்களில் 50 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# விசேட சுற்றிவளைப்பு 4,479 பேர் கைதாகினர்!

கொழும்பு, ஒக. 05

நாடளாவிய ரீதியில் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது 4,479 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

பொலிஸ் அதிகாரிகள், இராணுவ வீரர்கள் , பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் மற்றும் கடற்படையினர் ஆகியோர் இணைந்து இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

இந்த விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது, பல்வேறு குற்றச் செயல்கள் தொடர்பில் ஆதாரங்களுடன் 23 பேரும், சந்தேகத்தின் பேரில் 748 பேரும், பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட 210 பேரும், திறந்த பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட 161 பேரும், மதுபோதையில் வாகனங்களை செலுத்தியமை தொடர்பில் 110 சாரதிகளும், கவனக்குறைவாக வாகனங்களை செலுத்தியமை தொடர்பில் 25 சாரதிகளும், ஏனைய போக்குவரத்து விதிமுறைகளை மீறியமை தொடர்பில் 3,202 பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னாள் ஜனாதிபதிகளுக்கு உரிய பாதுகாப்பு வழங்குங்கள்!

## ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்து

கொழும்பு, ஓக. 05

முன்னாள் ஜனாதிபதிகளின் தேவையற்ற வரப்பிரசாதங்களை இரத்துச் செய்வதில் எந்த பிரச்னையும் இல்லை எனவும் ஆனால் அவர்களுக்கு தேவையான பாதுகாப்பு தொடர்ந்து வழங்கப்பட வேண்டும் எனவும் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் வலியுறுத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-முன்னாள் ஜனாதிபதிகளின் சிறப்புரிமைகளை இரத்துச்செய்வதற்காக அரசாங்கம் வர்த்தமானி ஒன்றை வெளியிட்டிருக்கின்றது. ஆனால் நீண்ட காலமாக மக்களின் வரி பணத்தில் முன்னாள் ஜனாதிபதிகள் சுகபோகம் அனுபவித்து வருவது நியாயம் இல்லை.

ஆனால் இந்த ஜனாதிபதிகள் நாட்டுக்கு செய்த சேவைகள் மற்றும் அவர்களின் அர்ப்பணிப்புக்காக அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் பாதுகாப்பு இல்லாமலாக்கக்கூடாது என்பதே எமது நிலைப்பாடு. அத்துடன் அரசாங்கம் முன்னாள் ஜனாதிபதிகளின் வரப்பிரசாதங்கள் மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஓய்வூதியங்களை இரத்துச்செய்யும் இந்த நடவடிக்கையை, ஒரு பஷனாகவே மேற்கொள்கிறது.

அவ்வாறு இல்லாமல் நியாயமான உரிமைகளை வழங்கி, அநியாயமான விடயங்களை நீக்குவதில் பிரச்சினை இல்லை. ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இந்த நாட்டு மக்க ளின் ஜனாதிபதி, அவருக்கும் போதுமான பாதுகாப்பு வழங் கப்படவேண்டும் என்றே நாங்கள் தெரிவிக்கிறோம்-என்றார். (அ)

# முன்னாள் ஜனாதிபதிகளுக்கு ஓய்வூதியத்தை அதிகரியுங்கள்!

## கோருகிறார் எஸ்.பி. திஸாநாயக்க

கொழும்பு, ஓக. 05

முன்னாள் ஜனாதிபதிகளுக்குரிய ஓய்வூதியம் இரத்து செய்யப்படக்கூடாது. தற்போது வழங்கப்படும் தொகை அதிகரிக்கப்படவேண்டும் என்று முன்னாள் அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு-

உலகில் பலம்பொருந்திய, அபிவிருத்தி அடைந்து வரும் மற்றும் வறுமை நாடுகளில் கூட முன்னாள் ஜனாதிபதிகளுக்கு அவர்களின் ஓய்வுகாலத்தில் வரப்பிரசாதங்கள் வழங்கப்பட்டுவருகின்றன. எனவே, இலங்கையில் இவற்றை நீக்குவதற்கு முற்படாமல், இந்நாட்டில் செய்ய வேண்டிய பல விடயங்கள் உள்ளன. அவற்றை செய்யவேண்டும்.

எனினும், முன்னாள் ஜனாதிபதிகளுக்கு அரசாங்கத்தால் வழங்கப்படும் மாளிகைகளை மீளப்பெறுவதில் தவறு கிடையாது.

முன்னாள் ஜனாதிபதிகளின் ஓய்வூதியத்தை நீக்க முடியாது. அது அரசமைப்பில் உள்ள விடயம். தற்போது வழங்கப்படும் தொகை அதிகரிக்கப்படவேண்டும். அத்துடன், பணியாள் தொகுதி மற்றும் பாதுகாப்பு என்பன வழங்கப்பட வேண்டும்-என்றார். (அ)

# தடுப்புக்காவலில் மரணிப்போர் விடயம் மேற்பார்வை அதிகாரியை நியமிக்குக!

கொழும்பு, ஓக. 05

பொலிஸ் நிலையங்களில் தடுத்து வைக்கப்படுகின்ற போது, மரணிப்போர் தொடர்பில், நடவடிக்கைகளை மேற்பார்வையிட ஒரு அதிகாரியை நியமிக்கவேண்டும் என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு உத்தரவிட்டுள்ளது.

பதில் பொலிஸ்மா அதிபருக்கு இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அது தொடர்பான அறிக்கையை 2025 ஒகஸ்ட் 28ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் மனித உரிமைகள் ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது.

இந்நிலையில் பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பணியகத்தின் காவலில் இருந்த போது மரணமான இலங்கை தொழிற்பயிற்சி ஆணைக்குழுவின் முகாமைத்துவ உதவியாளர் சமந்தா பிரீத்தி குமாரவின் குடும்பத்துக்கு ஒன்பது பொலிஸ் அதிகாரிகள் 2.5 மில்லியன் ரூபாயை இழப்பீடு வழங்கவும் ஆணைக்குழு உத்தரவிட்டுள்ளது.

ஹிக்கடுவ தல்வட்டாவைச் சேர்ந்த இறந்தவரின் மனைவி டி.பி.தில்ருக்ஷி என்பவர் தாக்கல் செய்த மனுவின் அடிப்படையில், மனித உரிமைகள் ஆணையகம் இந்த உத்தரவைப் பிறப்பித்தது.

முன்னதாக அண்மைய மாதங்களில் தொடர்ச்சியான காவல் நிலைய மரணங்களைத் தொடர்ந்து பொலிஸ் நிலைய மரணங்களைத் தடுப்பது குறித்து மே மாதம் பொலிஸ்துறைக்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு 119 வழிகாட்டு தல்களை வெளியிட்டுள்ளது.

இதேவேளை 2020 ஆம் ஆண்டு ஜனவரி முதல் மார்ச் 2025 வரையிலான ஐந்து ஆண்டுகளில் பொலிஸ்துறையின ருடனான மோதல்களால் ஏற்பட்ட 30 இறப்புகளை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு பதிவு செய்துள்ளது. (அ)

# வெளிநாட்டவர்களுக்கு சாரதி அனுமதி வழங்குவதற்கான அலுவலகம் திறப்பு

கொழும்பு, ஓக. 05

நாட்டுக்கு வருகை தருகின்ற வெளிநாட்டவர்களுக்குத் தேவையான சாரதி அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கான அலுவலகம் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்கவின் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

நாட்டுக்கு வருகை தரும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளின் போக்குவரத்து வசதி கருதி சுய போக்குவரத்தை எளிதாக்கும் நோக்கில் கட்டுநாயக்க விமான நிலையத்தில் நேற்று முன் தினம் தொடக்கம் தற்காலிக சாரதி அனுமதி பத்திரம் வழங்கும் செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் தங்கள் சுய போக்குவரத்துக்கான சாரதி அனுமதி பத்திரங்களை கட்டுநாயக்க விமான நிலைய வளாகத்தில் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

நாட்டுக்கு வருகைதரும் பெரும்பாலான சுற்றுலா பயணிகள் கட்டுநாயக்க விமான நிலையம் அல்லது அதனை அண்மித்த பகுதிகளில் வாடகை வாகனங்களை கொள்வனவு செய்து, அவர்கள் சுற்றுலா செல்வதாகவும் இதற்காக பெரும்பாலும் மோட்டார் சைக்கிள்கள் அல்லது முச்சக்கர வண்டிகளை பயன்படுத்துவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் தொடக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ள புதிய முறைமையின் கீழ் இலகுரக வாகனங்கள் மற்றும் மோட்டார் சைக்கிளை செலுத்துவதற்கான சாரதி அனுமதிப் பத்திரம் மாத்திரமே வழங்கப்படும் எனவும் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை கனரக வாகனங்கள் மற்றும் முச்சக்கரவண்டிகளுக்கான அனுமதிப் பத்திரம் வழங்கப்படமாட்டாது எனவும் வாகன போக்குவரத்து திணைக்களம் திட்டவட்டமாக அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# அனுமதியின்றி பூச்சிக்கொல்லி பொதிகள் விற்பனைக்கு கொண்டு சென்றவர் கைது!

கொழும்பு, ஓக. 05

பூச்சிக்கொல்லி பதிவாளரின் அனுமதியின்றி தயாரிக்கப்பட்ட 1,800 பூச்சிக்கொல்லி பொதிகளை விற்பனைக்காக கொண்டு சென்ற ஒருவரை திவுலப்பிட்டி பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நீர் கொழும்பு பிரதேச புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் குறித்த நபர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்டவர் கந்தானை பகுதியில் வசிக்கும் விமானப்படையிலிருந்து தப்பியோடிய 48 வயதுடையவர் என விசாரணையில் தெரியவந்துள்ளது.

பறிமுதல் செய்யப்பட்ட பூச்சிக்கொல்லி பொதிகளின் மதிப்பு சுமார் 2 லட்சம் ரூபாய் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் சந்தேக நபர் சிறிது காலமாக இந்த வியாபாரத்தில் சட்டவிரோதமாக ஈடுபட்டு வந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# கம்பஹா-கொழும்பு உள்ளிட்ட பல பஸ் சேவைகள் நிறுத்தம்

கொழும்பு, ஓக. 05

கம்பஹாவிலிருந்து கொழும்பு உள்ளிட்ட ஏனைய பல பகுதிகளுக்கு செல்லும் தனியார் பஸ்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டன.

கம்பஹாவிலிருந்து கொழும்பு உள்ளிட்ட பல இடங்களுக்குச் செல்லும் தனியார் பஸ்களுக்கு சில இடங்களில் நிறுத்துவதற்கு அனுமதி வழங்காமைக்கு எதிர்ப்பு தெரிவித்தே இந்த பணிப்புறக்கணிப்பு முன்னெடுக்கப்பட்டதாக கம்பஹா தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. (அ)

# தேசபந்துவின் தலைவிதி இன்று நிர்ணயிக்கப்படும்!

கொழும்பு, ஓக. 05

பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனை அந்தப் பதவியிலிருந்து அகற்றுவதற்கான தீர்மானத்தை நிறைவேற்றுவது தொடர்பான விவாதம் பாராளுமன்றத்தில் இன்று நடைபெறவுள்ளது.

சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன தலைமையில் பாராளுமன்றம் இன்று முற்பகல் 9.30 மணிக்கு கூடுகின்றது. ஆரம்ப கட்ட சபை நடவடிக்கைகள் முடிவடைந்த பின்னர், முற்பகல் 11.30 மணி முதல் பிற்பகல் 4 மணி வரை மேற்படி தீர்மானம் தொடர்பில் விவாதம் நடத்தப்படும். அதன்பின்னர் வாக்கெடுப்பு நடத்தப்படும்.

மேற்படி தீர்மானத்துக்கு ஆதரவாக பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி வாக்களிக்கவுள்ளது. பொதுஜன பெரமுனக் கட்சி எதிராக வாக்களிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அத்துடன், இலங்கைத் தமிழரசுக்கட்சி, தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி என்பனவும் ஆதரவாக வாக்களிக்கவுள்ளன என்று தெரியவருகின்றது. (அ)

# துப்பாக்கிச் சூடுகளை தடுக்க விசேட திட்டம்!

கொழும்பு, ஓக. 05

நாட்டில் தொடர்ந்தும் இடம்பெறும் குற்றங்கள் மற்றும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களைத் தடுப்பதற்காக காவல்துறை சிறப்புப் படையின் 15 குழுக்கள் செயல்பட்டு வருவதாக பொது பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

நாட்டில் இதுவரை குற்றக்குழுக்கள் 75 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

இதில் 40 பேர் கொல்லப்பட்டதுடன், 43 பேர் காயமடைந்தனர்.

நேற்று முன் தினமும் மாத்தறை பகுதியில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்று பதிவாகியிருந்தது. அங்கு நடந்த துப்பாக்கிச் சூட்டில் மீன்வர்த்தகர் ஒருவர் காயம டைந்தார்.

இந்நிலையிலேயே, நாட்டில் நிகழும் குற்றங்களைத் தடுக்க ஒரு சிறப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளதாக பொது பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார். (அ)

# கழிவுநீர் குழிக்குள் விழுந்து சிறுவன் பலி

நுவரெலியா, ஓக. 05

கழிவுநீர் குழியில் விழுந்து 8 வயது சிறுவன் ஒருவர் உயிரிழந்தார்.

நுவரெலியா - பொகவந்தலாவை பொலிஸ் பிரிவிலுள்ள கிவ் தோட்ட கீழ் பிரிவில் நேற்று முன் தினம் இரவு 7 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சிறுவனின் சடலம் மீட்கப்பட்டு டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவின் தேவைக்கு அமைய நாட்டின் சட்டத்தை திருத்துவதா?

## விமல் வீரவன்ஸ கேள்வி



கொழும்பு, ஓக. 05

**இந்தியாவின் தேவைக்கமைய நாட்டின் சட்டத்தை எவ்வாறு திருத்தம் செய்ய முடியும் என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ கேள்வி எழுப்பியுள்ளார். கொழும்பில் உள்ள தேசிய சுதந்திர முன்னணியின் காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே இவ்வாறு குறிப்பிட்டார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-இலங்கையின் டிஜிற்றல் ஆள் அடையாள அட்டை விநியோகிக்கும் கருத்திட்டத்தை அரசாங்கம் இந்திய நிறுவனத்துக்கு வழங்கியுள்ளது.

டிஜிற்றல் அடையாள அட்டை கருத்திட்டத்துக்கான சகல பணிகளையும் தேசிய ஆள் அடையாள அட்டை திணைக்களம் முன்னெடுத்து அப்பணிகள் நிறைவுறும் தருவாயில் உள்ள நிலையில் தான், அரசாங்கம் இந்தியா வுக்கு இத்திட்டத்தை வழங்கியுள்ளது.

இந்த கருத்திட்டத்துக்கான விலைமனுகோரலை இந்தியாவின் என்.ஐ.எஸ்.ஜி நிறுவனம் மேற்கொண்டுள்ளது.

இந்த கருத்திட்டத்துக்கு இந்திய நிறுவனம் மாத்திரமே விலைமனுகோரல் செய்ய முடியும்.

இந்தியாவின் தரவு கட்டமைப்பின் வன்பொருள் மற்றும் மென்பொருள் கட்டமைப்பை மாத்திரம் பயன்படுத்த வேண்டும் என்று நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவுக்கு வழங்கப்பட்டுள்ள இந்த கருத்திட்டம் தொடர்பில் இலங்கை தரப்பினருக்கும், இந்திய நிறுவன தரப்பினருக்கும் இடையிலான நிகழ்நிலை முறைமை ஊடான சந்திப்பு கடந்த மாதம் 25 ஆம் திகதி இடம்பெற்றது.

இலங்கை சார்பில் பொருளாதார அமைச்சின் செயலாளர் வருண தனபால, தனியார் நிறுவனம் ஒன்றின் தலைமை நிர்வாக அதிகாரியான சஞ்சன கருணாரத்ன, டிஜிற்றல் பொருளாதாரம் தொடர்பிலான ஜனாதிபதியின் ஆலோசகரான ஹான்ஸ் விஜேசூரிய ஆகியோர் கலந்துக் கொண்டுள்ளனர்.

பொருளாதார அமைச்சின் செயலாளர் வருண தனபால அமைச்சின் செயலாளர் காரியாலயத்தில் இருந்து நிகழ்நிலை முறைமை ஊடாக சந்திப்பில் கலந்துக் கொள்ளாமல் கொழும்பில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகர் காரியாலயத்துக்கு சென்று அங்கிருந்தவாறு குறித்த சந்திப்பில் கலந்துக் கொண்டுள்ளார்.

இந்த சந்திப்பின் போது டிஜிற்றல் அடையாள அட்டையை உருவாக்குவதில் உள்ள பிரச்னைகள் பற்றி விரிவாக கலந்துரையாடப்பட்டுள்ளது.

இலங்கையில் தற்போது அமுல்படுத்தப்பட்டுள்ள தரவு பாதுகாப்பு சட்டத்தின் பிரகாரம் டிஜிற்றல் ஆள் அடையாள அட்டை உருவாக்கத்துக்கான பணிகளை முன்னெடுப்பதில் சிக்கல்நிலை காணப்படுவதாக இந்திய நிறுவன பிரதிநிதிகள் குறிப்பிட்டுள்ளனர்.

இதற்கு டிஜிற்றல் பொருளாதார அமைச்சின் செயலாளர் வருண தனபால இன்னும் ஒன்றரை மாத காலத்துக்குள் தரவு பாதுகாப்புச் சட்டத்தை திருத்தம் செய்யும் யோசனை முன்வைக்கப்படும் என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவின் தேவைக்கமைய நாட்டின் சட்டத்தை எவ்வாறு திருத்தம் செய்ய முடியும்.

இந்த திருத்த யோசனைக்கு எத்தனை பேர் ஆதரவளிப்பார்கள் என்பதை பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

நாட்டு மக்கள் இவ்விடயத்தில் விசேட கவனம் செலுத்த வேண்டும்-என்றார். (அ)

# எம்.பிக்களுக்கான ஓய்வூதியத்தை நிறுத்தும் முன்மொழிவு விரைவில்!

கொழும்பு, ஓக. 05

பாராளுமன்ற உறுப்பினர்களின் ஓய்வூதியத்தை நிறுத்துவதற்கான முன்மொழிவு விரைவில் செயல்படுத்தப்படும் என வர்த்தக அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

அரசியல்வாதிகளுக்கு வழங்கப்படும் சலுகைகளைக் குறைப்பது தற்போதைய அரசின் முக்கிய நோக்கமாகும் என அவர் சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதிகளுக்கு வழங்கப்படும் சலுகைகளையும், அதற்காக உருவாக்கப்பட்ட சட்டங்களையும் மாற்றுவோம் என குறிப்பிட்ட அமைச்சர்,

ஓய்வூதியம் இல்லையென்றால் வாழ முடியாது என்பவர்களுக்கு அஸ்வெசும நிவாரணத்தை வழங்குவோம் எனவும் குறிப்பிட்டார்.

அஸ்வெசுமவுக்கு விண்ணப்பித்தால் அதனை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் வசந்த சமரசிங்க மேலும் தெரிவித்தார். (அ)

# மாமியாரை கழுத்து நெரித்து கொலை செய்தார் மருமகன்!

கொழும்பு, ஓக. 05

இரத்தினபுரி -டிப்போ சந்தி பகுதியில் உள்ள வீடொன்றில் தனது மாமியாரை கழுத்து நெரித்து கொலை செய்த மருமகன் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டதாக இரத்தினபுரி பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த கொலைச் சம்பவம் நேற்று முன்தினம் அதிகாலை இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

74 வயதுடைய மாமியாரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

இரத்தினபுரி -டிப்போ சந்திப் பகுதியில் உள்ள வீடொன்றில் சடலம் ஒன்று கிடப்பதாக இரத்தினபுரி பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளது.

இதனையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

பொலிஸாரின் விசாரணைகளில், மருமகனுக்கும் மாமியாருக்கும் இடையில் ஏற்பட்ட தகராறு காரணமாக இந்த கொலை இடம்பெற்றுள்ளதாக தெரியவந்துள்ளது.

இதனையடுத்து சந்தேக நபரான மருமகன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்டவர் 29 வயதுடையவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த கொலைச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை இரத்தினபுரி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# பீடி இலை, உலர்ந்த இஞ்சி கடத்த முற்பட்டவர் கைது!

கொழும்பு, ஓக. 05

நுரைச்சோலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் பீடி இலைகள் மற்றும் உலர்ந்த இஞ்சிகளை நாட்டினுள் சட்டவிரோதமான முறையில் கடத்த முற்பட்ட நபரொருவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் நேற்று முன்தினம் இரவு பொலிசாரினால் முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடமிருந்து 309 கிலோகிராம் 100 கிராம் பீடி இலைகள் 537 கிலோகிராமிற்கும் அதிக தொகை உலர்ந்த இஞ்சிகள் மற்றும் குறித்த பொருட்களை சட்டவிரோதமாக கடத்த பயன்படுத்திய வொறி என்பன பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளது.

சந்தேக நபர் 37 வயதுடைய கல்பிட்டிய பகுதியை சேர்ந்தவர் என தெரிய வந்துள்ள நிலையில் நுரைச்சோலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ)

# நகை விற்பனை நிலையமொன்றில் கொள்ளையிட முயன்ற பெண் கைது

கொழும்பு, ஓக. 05

ஹற்றன், நகரில் தங்கநகை விற்பனை நிலையமொன்றில் வலி நிவாரண வகையான திரவமொன்றை பயன்படுத்தி தங்க நகையை கொள்ளையிட முயற்சித்த பெண்ணொருவரை ஹற்றன் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இரவு வேளையில் கடை மூடும் நேரம் நெருங்கி கொண்டிருந்தபோது குறித்த பெண், நகைக் கடைக்கு சென்று தங்கச் சங்கிலி ஒன்றை காண்பிக்குமாறு தெரிவித்து அது தொடர்பில் விசாரித்துக்கொண்டிருந்தார்.

குறித்த நகைக் கடை உரிமையாளர் சங்கிலியை காண்பித்துக் கொண்டிருந்த நிலையில், அந்தப் பெண் தனது பையிலுள்ள வலி நிவாரணத் தன்மைக் கொண்ட திரவத்தை எடுத்து உரிமையாளரது முகத்தில் தெளிக்க முற்பட்டவேளை சுதாரித்துக்கொண்ட கடை உரிமையாளர் அதனை தடுத்து யுவதியை ஹற்றன் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் மஸ்கெலியா அப்கொட் பகுதியைச் சேர்நத 26 வயதுடைய பெண் என ஆரம்ப கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. (அ)

## சோமரத்ன தண்டனை விவகாரம்:

# ஜனாதிபதி ஆணைக்குழு அமைப்பது சிக்கல் தரும்



கொழும்பு, ஓக. 05

கிருஷாந்தி குமாரசுவாமி படுகொலை வழக்கின் பிரதான குற்றவாளியான சோமரத்ன ராஜபக்ஷவுக்கு உயர் நீதிமன்றம் மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது. இந்த விவகாரத்தை ஜனாதிபதி ஆணைக்குழு நியமித்து விசாரணை செய்வது சிக்கலை ஏற்படுத்தும். இந்த விடயம் குறித்து ஜனாதிபதி எடுக்கும் நடவடிக்கை என்ன என்பதை எதிர்பார்த்துள்ளோம் - இவ்வாறு முன்னாள் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

மரண தண்டனை கைதியான சோமரத்ன ராஜபக்ஷ சர்வதேச விசாரணைக்கு தயார் என்று அவரின் மனைவி எழுதிய கடிதம் தொடர்பில் பதிலளித்தபோதே சரத் வீரசேகர மேற்கண்டவாறு கூறினார்.

இலங்கையின் உள்ளக விவகாரத்தை சர்வதேசத்துக்கு கொண்டு செல்லும் ஓர் உத்தியாகவே இவ்விடயம் பயன்படுத்தப்படுகிறது. சர்வதேச கட்டமைப்புக்கு செல்வதற்கு முன்னர் தேசிய நீதிக் கட்டமைப்பை நாடலாம்.

கிருஷாந்தி படுகொலை வழக்கில் சோமரத்ன ராஜபக்ஷ உயர்நீதிமன்றத்தால் குற்றவாளியாக்கப்பட்டு அவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. இராணுவத்தினர் குற்றம் புரிந்திருப்பார்களாயின், அவர்களுக்கு உள்ளக நீதிக் கட்டமைப்பின்கீழ் தண்டனை வழங்க வேண்டும் என்பதில் உறுதியாக உள்ளோம். முறையான விசாரணைகளின் பிரகாரமே அவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.


கிருஷாந்தி குமாரசுவாமி படுகொலை வழக்கின் பிரதான குற்றவாளியான சோமரத்ன ராஜபக்ஷவுக்கு உயர்நீதிமன்றம் மரண தண்டனை விதித்துத் தீர்ப்பளித்துள்ளது. இந்த விவகாரத்தை ஜனாதிபதி ஆணைக்குழு நியமித்து விசாரணை செய்வது சிக்கல் நிலையை ஏற்படுத்தும்.

இந்த விவகாரத்தை சர்வதேச விசாரணைக்குக் கொண்டு சென்று சாட்சியமளிக்க சோமரத்ன ராஜபக்ஷ தயாராகவுள்ளார் என்று அவரின் மனைவி குறிப்பிட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. சர்வதேச விசாரணைக்கு செல்வதற்கு முன்னர் உள்ளக நீதி கட்டமைப்பின் ஊடாக நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடர் நடைபெறவுள்ள நிலையில் இவ்வாறான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன. சோமரத்ன ராஜபக்ஷவின் மனைவி அனுப்பி வைத்த கடிதம் தொடர்பில் ஜனாதிபதி எடுக்கும் நடவடிக்கைகள் என்ன என்பதை எதிர்பார்த்துள்ளோம் - என்றார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூரிய வாள்கள், ஐஸ் போதையுடன் 19 பேர் பொலிஸாரிடம் சிக்கினர்!



திருகோணமலை, ஓக. 05

**சந்தேகத்துக்கிடமான முறையில் வீடொன்றில் தங்கியிருந்த 19 பேர் மூதூர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதுடன் கூரிய வாள்கள், ஐஸ் போதைப்பொருளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.**

சந்தேகத்துக்கிடமான முறையில் மூதூர் பொலிஸ் பிரிவிலுள்ள தோப்பூர் பிரதேசத்தில் ஒரு குழுவினர் ஒன்று கூடுவதாக மூதூர் பொலிஸாருக்கு தகவல் கிடைத்ததை அடுத்து மூதூர் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் ஆலோசனைக்கமைவாக பொலிஸ் குழுவினர் குறித்த வீட்டினை முற்றுகையிட்டனர்.

இதன்போது 19 பேர் கைது செய்யப்பட்டதுடன் அவர்களிடமிருந்து 4 கூரிய வாள்கள், 2520 மில்லிகிராம், 2300 மில்லிகிராம் நிறையுடைய இரண்டு ஐஸ் போதைப் பொருள் பைக்கற்றுகளும் மீட்கப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் ஈச்சிலம்பற்று, தோப்பூர், மூதூர், பச்சநூர் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்று தெரியவந்துள்ளது.

இவர்கள் மூதூர் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டு வருவதுடன் இவர்களை மூதூர் நீதிவான் முன்னிலையில் முற்படுத்துவதற்கான ஏற்பாடுகளையும் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.(எ)

# 342 பேருக்கு தேசிய தொழில் சார் வாழ்க்கைத் திறன் சான்றிதழ்கள்




ஒலுவில், ஒக. 05

விவேகானந்த தொழில்நுட்பவியல் கல்லூரியின் புதுக்குடியிருப்பு மற்றும் கொம்மாந்துறை கிளைகளில் பயிற்சி பெற்ற பயிலுநர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை கிழக்கு பல்கலைக்கழகத்தின் அழகியல் கற்கைகள் நிறுவன மண்டபத்தில் நடைபெற்றது.

கல்லூரியின் நிறைவேற்றுப் பணிப்பாளர் க. பிரதீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கற்கை நெறிகளைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கு என். வி. கியு. தர சான்றிதழ்கள் (தேசிய தொழில் சார் தகைமைத் தகுதிச் சான்றிதழ்), வாழ்க்கைத் திறன் பயிற்சி நெறிக்கான சான்றிதழ்கள் மற்றும் ஆங்கில மற்றும் சிங்கள பாடநெறிக்கான சான்றிதழ்கள்.என வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் ஆன்மீக விருந்தினராக மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் பொது முகாமையாளர் சிறீமத் சுவாமி நீலமாதவானந்தஜி மகாராஜ், பிரதம விருந்தினராக உதவி மாவட்ட அரசாங்க அதிபர் ஜீ. பிரணவன், சிறப்பு விருந்தினராக இலங்கை கிழக்குப் பல்கலைக்கழக சுவாமி விபுலானந்த அழகியல் கற்கைகள் நிறுவனத்தின் பணிப்பாளர், பேராசிரியர் புளோரன்ஸ் பாரதி கெனடி ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.(எ-08)

# ஐஸ் போதைப்பொருட்களுடன் ஏழு பேர் பொலிஸாரால் கைது

காத்தான்குடி, ஒக. 05

ஐஸ் போதைப்பொருட்களுடன் ஏழு பேர் காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பல்வேறு பிரதேசங்களில் கைது செய்யப்பட்டுள்ளதாக காத்தான்குடி பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி எஸ். நந்தன தெரிவித்தார்.

மட்டக்களப்பு, காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காத்தான்குடி, புதிய காத்தான்குடி, பாலமுனை, பூநொச்சிமுனை போன்ற பிரதேசங்களில் வைத்து ஐஸ் போதை பொருட்களுடன் மேற்படி நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபர்களிடமிருந்து 2520 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

சந்தேகநபர்கள் மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட நிலையில் இன்று 5 ஆம் திகதி வரை அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார். (எ)

# மருதமுனையில் பொலிஸார் சோதனை 93 பேருக்கு எதிராக சட்ட நடவடிக்கை

மருதமுனை, ஒக. 05

அம்பாறை மாவட்டம் கல்முனை பிராந்தியத்தில் விசேட போக்குவரத்து பொலிஸாரின் திடீர் சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு 12 மோட்டார் சைக்கிள்கள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் 93 பேருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் மாலை இந்த திடீர் சோதனை நடவடிக்கை பெரிய நீலாவணைக் குட்பட்ட மருதமுனை மற்றும் கடற்கரை வீதி போன்ற இடங்களில் மேற்கொள்ளப்பட்டன.

இந்தத் திடீர் சோதனையில் மோட்டார் சைக்கிள் ஆவணம், காப்புறுதி எதுவும் இன்றி மோட்டார் சைக்கிளை செலுத்துவது, சாரதி அனுமதிப்பத்திரமின்றி வாகனம் செலுத்துவது, தலைக்கவசம் அணியாது செல்வது, ஒரு மோட்டார் சைக்கிளில் இருவருக்கு மேற்பட்டவர்கள் பயணிப்பது, அதிவேகமாக செல்வது, மிக ஒலி எழுப்பிய மோட்டார் சைக்கிள்கள் தொடர்பில் கண்காணிக்கப்பட்டு தண்டப்பணம் விதிக்கப்பட்டு வீதி ஒழுங்குமுறை தொடர்பான ஆலோசனைகள் பொலிஸாரால் வழங்கப்பட்டன.


இந்தச் சோதனை நடவடிக்கையானது கிழக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் வருண ஜெயசுந்தரவின் ஆலோசனையில் அம்பாறை மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் சுஜித் வெதமுல்ல வழிகாட்டலில் அம்பாறை மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் டி. பி. எச். கலனசிறி நெறிப்படுத்தலில் அம்பாறை மாவட்ட கல்முனை பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எம். கே. இப்னு அஸார் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது கல்முனை, சம்மாந்துறை, சவளைக்கடை, சாய்ந்தமருது பொலிஸ் நிலைய பொலிஸார் இணைந்து முக்கிய சந்திகள், பிரதான புறநகர் வீதிகளில் திடீர் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

குறிப்பாக இந்தச் சோதனை நடவடிக்கையின் போது 12 மோட்டார் சைக்கிள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் 93 பேருக்கு தண்டப்பணம் விதிக்கப்பட்டது.

இந்தச் சோதனை நடவடிக்கையில் பெரிய நீலாவணை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஜே. எஸ். கே. வீரசிங்க, கல்முனை தலைமையக பொலிஸ் மோட்டார் போக்குவரத்துப் பிரிவு பொறுப்பதிகாரியும் பிரதம பொலிஸ் பரிசோதகருமான பி.ரி. நஸீரும் பங்கேற்றிருந்தனர்.

இதேவேளை அதிக ஒளி மற்றும் ஒலி எழுப்பும் மோட்டார் சைக்கிள்கள் மற்றும் ஓட்டோக்களை பயன்படுத்தும் நபர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (எ-01)



மாவடிப்பள்ளி ஆற்றில்

# வெட்டுக்காயங்களுடன் குடும்பஸ்தரின் சடலம்!

காரைதீவு, ஒக. 05

அம்பாறை மாவட்டம், காரைதீவு பொலிஸ் பிரிவுக் குட்பட்ட மாவடிப்பள்ளி ஆற்றில் 53 வயது மதிக்கத்தக்க குடும்பஸ்தரின் சடலம் நேற்று முன்தினம் மீட்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டம், செங்கலடி பகுதியைச் சேர்ந்த பாக்கியராசா கிருபாகரன் என அடையாளம் காணப்பட்ட குறித்த குடும்பஸ்தரின் சடலத்தில் கழுத்து, தலை மற்றும் தோள்பட்டை உள்ளிட்ட பகுதிகளில் காயங்கள் காணப்படுவதாக ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

குறித்த நபர் மாவடிப்பள்ளி பகுதியில் உள்ள அரிசி ஆலை ஒன்றில் தொழிலாளியாகப் பணியாற்றி வந்தவர். கடந்த 2ஆம் திகதி முதல் அவர் காணாமல் போனதாக அரிசி ஆலை உரிமையாளர் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரிவித்தார்.

சம்பவ இடத்துக்கு கல்முனை பிராந்திய உதவி பொலிஸ் அத்தியட்சகர் எம்.கே. இப்னு அஸார் வருகை தந்து, விசாரணைகளை துரிதப்படுத்துமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (எ)

# வாழும் வசந்தன் நூல் வெளியீடு

மட்டக்களப்பு, ஒக. 05

மட்டக்களப்பு, முனைக்காட்டைச்சேர்ந்த அவுஸ்திரேலியாவில் வசிக்கும் தாந்தியான் சிதம்பரப்பிள்ளை தொகுத்து வழங்கிய "வாழும் வசந்தன்" நூல் வெளியீட்டு விழா மகிழடித்தீவு பிரதேச கலாசார மண்டபத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. (எ-08)




# திருகோணமலை கல்தீவில் யானை தாக்கி ஒருவர் பலி

திருகோணமலை, ஒக. 05

திருகோணமலை - ஈச்சிலம்பற்று பொலிஸ் பிரிவிலுள்ள கல்தீவு காட்டுப்பகுதியில் யானை தாக்கி ஒருவர் உயிரிழந்ததாக ஈச்சிலம்பற்று பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை இடம்பெற்றது.

விறகு எடுப்பதற்காக காட்டுக்குச் சென்றபோதே யானை தாக்கி இவர் உயிரிழந்தார்.

குறித்த சம்பவத்தில் உயிரிழந்தவர் வெருகல் -சேனையூர் கிராமத்தைச் சேர்ந்த 6 பிள்ளைகளின் தந்தையான கதிர்காமத்தம்பி கனகராசா (வயது -69) என பொலிஸார் தெரிவித்தனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி, வர்த்தக போர்களில் வெற்றியாளர்கள் இல்லை

## அமெரிக்காவுக்கு சீனா பதில்

பீஜிங், ஓக. 05



வரிப் போர்களிலும் வர்த்தகப் போர்களிலும் வெற்றியாளர்கள் என்று எவரும் இல்லை என சீனாவின் வெளிவிவகார அமைச்சக பேச்சாளர் குவோஜியாகுன் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் வரித் திட்டங்களுக்கான சீனாவின் எதிர்ப்பை மீண்டும் வலியுறுத்தியுள்ள அவர், பாதுகாப்புவாதம் அனைத்துத் தரப் பினரின் நலன்களுக்கும் தீங்கை ஏற்படுத்தும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்காவின் அண்மைய வரி விதிப்பு அறிவிப்பில் சீனா உள்வாங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

# படகு கடலில் கவிழ்ந்து விபத்து; அகதிகள் 68 பேர் உயிரிழப்பு!

சனா, ஓக. 05

**அகதிகள் சென்ற படகு கடலில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 68 பேர் உயிரிழந்தனர்.பொருளாதாரம் மற்றும் வாழ்வாதாரத்தை தேடி ஆபிரிக்கா, எகிப்து, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், ஈராக், சிரியா உட்பட பல்வேறு நாடுகளைச் சேர்ந்த ஆயிரக்கணக்கானோர் அகதிகளாக கடல் வழியாக சட்டவிரோதமாக ஐரோப்பிய நாடுகளுக்குள் நுழையும் ஆபத்தான பயணம் மேற்கொள்கின்றனர். இந்தப் பயணத்தின் போது விபத்துகள் ஏற்பட்டு உயிரிழப்பு சம்பவங்களும் நிகழ்கின்றன.**

இந்த நிலையில், ஆபிரிக்காவின் எதியோப்பியாவிலிருந்து 154 பேர் மத்திய தரைக்கடல் வழியாக ஐரோப்பிய நாடுகளுக்குள் சட்டவிரோத அகதிகளாக நுழையும் ஆபத்தான பயணத்தை மேற்கொண்டுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு இவர்கள் மத்திய தரைக்கடலில் ஏமன் கடற்பகுதியில் சென்றுகொண்டிருந்தபோது படகு கடலில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இந்த விபத்து குறித்து தகவலறிந்த ஏமன் கடற்படையினர் விரைந்து சென்று மீட்புப்பணியில் ஈடுபட்டனர். இதில், 12 அகதிகள் உயிருடன் மீட்கப்பட்டனர். ஆனாலும், இந்த விபத்தில் 68 அகதிகள் உயிரிழந்தனர். எஞ்சிய 74 பேர் கடலில் மாயமான நிலையில் அவர்களைத் தேடும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது. இதேவேளை, மாயமான 74 பேரும் உயிரிழந்திருக்கலாம் என்று அதிகாரிகள் தெரிவித்தனர். (எ)

# தேச நலனை காக்க அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும்

## அமெரிக்க வரி விதிப்பு பற்றி இந்திய அமைச்சர் கருத்து

புதுடில்லி, ஓக. 05

இந்தியப் பொருட்களுக்கு அமெரிக்கா 25 சதவீதம் இறக்குமதி வரி விதித்துள்ள நிலையில் நாட்டின் நலனை பாதுகாக்க அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்று இந்திய வர்த்தக அமைச்சர் பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மக்களவையில் பேசிய பியூஷ் கோயல், "பரஸ்பர வரிகள் குறித்த நிர்வாக உத்தரவை அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கடந்த ஏப்ரல் 2ஆம் திகதி பிறப்பித்தார். ஏப்ரல் 5 முதல் 10 சதவீத அடிப்படை வரி அமுலில் உள்ளது. அந்த 10 சதவீத அடிப்படை வரியுடன் மொத்தம் 26 சதவீத வரி அறிவிக்கப்பட்டுள்ளது. கூடுதல் வரி ஏப்ரல் 9ஆம் திகதி அன்று அமுலுக்கு வர திட்டமிடப்பட்டது. ஆனால், 90 நாட்களுக்கு நீடிக்கப்பட்டு, ஓகஸ்ட் முதலாம் திகதி முதல் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இதன் தாக்கம் குறித்து அரசாங்கம் ஆராய்ந்து வருகிறது. இந்தியாவின் நலனை பாதுகாக்கத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் அரசாங்கம் எடுக்கும். பலவீனமான பொருளாதாரம் என்ற நிலையில் இருந்து, 3ஆவது பெரிய பொருளாதாரம் என்ற நிலையை நோக்கி இந்தியா சென்றுகொண்டிருக்கிறது"- என அவர் தெரிவித்தார். (எ)

# தி.மு.கவுக்கு இனி தமிழகத்தில் இடமே இல்லை

சென்னை, ஓக. 05

இன்னும் 70 ஆண்டுகள் ஆனாலும் இனி தி.மு.கவுக்கு தமிழகத்தில் இடமில்லை என்று அ.தி.மு.க. பொதுச்செயலாளர் பழனிச்சாமி தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது, மக்களைக் காப்போம்: தமிழகத்தை மீட்போம்" என்ற பயணத்தை கோவையில் கடந்த ஜூலை 7ஆம் திகதி தொடங்கினேன். இதுவரை 21 நாட்களில் 14 மாவட்டங்கள், 61 சட்டப்பேரவை தொகுதிகளில் பிரசாரம் மேற்கொண்டுள்ளேன். 3200 கிலோ மீற்றர் தூரம் பயணித்துள்ளேன்.

சுமார் 25 இலட்சம் மக்களை சந்தித்து, நேரடியாக உரையாடி அவர்களின் குறைகளை, கோரிக்கைகளை, எண்ணவோட்டங்களைக் கேட்டறிந்தேன்.

இந்த பயணத்தில் சுமார் 42 மணி நேரத்துக்கும் மேலாக மக்களிடம் உரையாற்றியுள்ளேன் என்றும் குறிப்பிட்டுள்ளார். (எ)

# இந்தியா - பாகிஸ்தான் போரை தலையிட்டு தீர்த்து வைத்தேன்

## ட்ரம்ப் மீண்டும் திட்டவட்டம்

நியூயோர்க், ஓக. 05

இந்தியா - பாகிஸ்தான் போரை தலையிட்டு தீர்த்து வைத்தேன் என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மீண்டும் தெரிவித்துள்ளார்.

ஒரு மாதத்துக்கு சராசரியாக ஒரு போரை முடித்து வைத்ததாக ட்ரம்ப் குறிப்பிட்டுள்ளார்.

காஷ்மீர் - பஹல்காமில் இடம்பெற்ற பயங்கரவாதத் தாக்குதலில் சுற்றுலாப் பயணிகள் 26 பேர் கொல்லப்பட்டனர். இதற்கு பதிலடியாக "ஒப்ரேஷன் சிந்தூர்" என்ற பெயரில் பாகிஸ்தான் இராணுவ நிலைகள் மீது இந்தியா தாக்குதல் நடத்தி பலத்த சேதத்தை ஏற்படுத்தியது. இரு நாடுகளுக்கும் இடையே போர் உக்கிரமான நிலையை எட்டவிருந்த நிலையில், திடீரென இரு நாடுகளும் பரஸ்பரம் போர் நிறுத்தத்தை மேற்கொண்டன.

இந்த நிலையில் தான் முன்னின்று தலையிட்டு பேச்சுவார்த்தை நடத்தி கேட்டுக்கொண்டதால் தான் இரு நாடுகளும் போர் நிறுத்தம் செய்ததாக ட்ரம்ப் சமீபத்தில் கூறியிருந்தார். இதற்கு இந்திய மத்திய அரசு மறுப்பு தெரிவித்த நிலையில், இதுதொடர்பில் பாராளுமன்றத்தில் காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தின.

இதன் தொடர்ச்சியாக நேற்று முன்தினம் ட்ரம்ப் வெளியிட்டுள்ள சமூகவலைத்தள பதிவில், இந்தியா - பாகிஸ்தான், தாய்லாந்து - கம்போடியா, கொங்கோ மற்றும் ருவாண்டா உள்ளிட்ட நாடுகளுக்கு இடையேயான மோதல்களை தான் தலையிட்டு தீர்த்து வைத்ததால், அவை நிறுத்தப்பட்டன என்று மீண்டும் தெரிவித்துள்ளார்.

மேலும் நான் நிறைய போர்களை நிறுத்தி வைத்தேன். ஒரு மாதத்துக்கு சராசரியாக ஒரு போரை முடித்து வைத்தேன் என்று நினைக்கிறேன். ஆனால், உங்களுக்குத் தெரியும், நாங்கள் மில்லியன் கணக்கான உயிர்களைக் காப்பாற்றுகிறோம் என்று பதிவிட்டுள்ளார்.

இந்தியா - பாகிஸ்தான் போர் விவகாரம் தொடர்பில் ட்ரம்ப் மீண்டும் இவ்வாறு கருத்து கூறியிருப்பது சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது. (எ)

# பலஸ்தீன நாடு நிறுவப்படும் வரை ஆயுதங்களை கைவிடமாட்டோம்

## ஹமாஸ் அமைப்பு திட்டவட்டம்

ஜெருசலேம், ஓக. 05

சுதந்திர பலஸ்தீன தேசமொன்று உருவாகும் வரை ஆயுதங்களை கைவிடப்போவதில்லை என்று ஹமாஸ் அமைப்பு தெரிவித்துள்ளது.

2007 முதல் காஸாவை தனது கட்டுப்பாட்டின் கீழ் வைத்துள்ள ஹமாஸ் ஆயுதங்களை கைவிடவேண்டும் என்ற வேண்டுகோள்கள் எழுந்துள்ளன.

இதற்கு பதிலளித்துள்ள ஹமாஸ் அமைப்பு, ஜெருசலேமை தலைநகராக கொண்ட சுதந்திரமான முழு இறையாண்மை கொண்ட பலஸ்தீன நாடு நிறுவப்படாவிட்டால் ஆயுதமேந்திய எதிர்ப்புக்கான உரிமையை விட்டுக்கொடுக்க முடியாது எனத் தெரிவித்துள்ளது.

இதேவேளை ஹமாஸ் தன்னிடமுள்ள இஸ்ரேலிய பணயக்கைதியை காண்பிக்கும் வீடியோவொன்றையும் வெளியிட்டுள்ளது.

எவியதார் டேவிட் என்ற பணயக்கைதியின் வீடியோவையே ஹமாஸ் அமைப்பு வெளியிட்டுள்ளது. மிகவும் மெலிந்த நிலையில் காணப்படும் அவர் ஒரு குழியை வெட்டுகின்றார். 'இந்தக் குழி எனக்கானது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

பணயக்கைதிகளும் பட்டினிகிடக்கின்றனர் என ஹமாஸ் தெரிவித்துள்ளது. (எ)

# ரஷ்ய இராணுவ தளங்கள்மீது உக்ரைன் ட்ரோன் தாக்குதல்

மொஸ்கோ, ஓக. 05

ரஷ்ய இராணுவத் தளங்கள் மீது உக்ரைன் ட்ரோன் தாக்குதல் நடத்தியுள்ளது.

உக்ரைன் ஏவிய 112 ட்ரோன்களை ரஷ்ய எல்லையில் அழித்ததாக ரஷ்ய பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

ரஷ்யா - உக்ரைன் இடையேயான போர் 3 ஆண்டுகளுக்கு மேலாக நீடித்து வருகிறது. இந்த நிலையில் ரஷ்யாவில் உள்ள இராணுவத் தளங்கள் மற்றும் எரிவாயு குழாய் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. ரஷ்யாவின் தென் மேற்கு நகரமான பிரி மோர்ஸ்கோ-அக்தார்ஸ் கில் உள்ள ஓர் இராணுவ விமான நிலையத்தை தாக்கியதாக உக்ரைன் தெரிவித்துள்ளது.

அங்கு ஏராளமான ஈரானிய ட்ரோன்கள் சேமித்து வைக்கப்பட்டிருந்தன. ட்ரோன் தாக்குதலில் அந்தப் பகுதி தீப்பிடித்து எரிந்தது என்று உக்ரைன் இராணுவம் தெரிவித்தது. ரஷ்யாவின் தெற்கு பென்சா பிராந்தியத்தில் உள்ள இராணுவ டிஜிற்றல் தொலைத்தொடர்பு, விமான சாதனங்கள், கவச வாகனங்கள் மற்றும் கப்பல்களை தயாரிக்கும் நிறுவனம் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. மேலும் ஒரு எரிவாயு குழாய் மீதும் தாக்குதல் நடைபெற்றது. உக்ரைனின் ட்ரோன் தாக்குதலில் மூவர் பலியாகினர்.

இதற்கிடையே உக்ரைன் ஏவிய 112 ட்ரோன்களை ரஷ்ய எல்லையில் வைத்தே அழித்ததாக ரஷ்ய பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. நேற்று முன்தினம் நள்ளிரவில் ஒரு பெரிய வான்வழித் தாக்குதலை இராணுவம் முறியடித்ததாக ரஷ்யா தெரிவித்துள்ளது. உக்ரைன் போரை முடிவுக்கு கொண்டுவர அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் முயற்சித்து வருகிறார். இதற்காக ரஷ்யாவுக்கு கடும் எச்சரிக்கை விடுத்து கெடுவை தெரிவித்திருந்தார். ஆனால் அதை ரஷ்யா ஏற்கவில்லை. இதனால் உக்ரைன் போர் விவகாரத்தில் ரஷ்யா-அமெரிக்கா இடையே மோதல் போக்கு ஏற்பட்டுள்ளது. இதை யடுத்து ரஷ்ய எல்லை அருகே 2 அணுசக்தி நீர் மூழ்கிக் கப்பல்களை நிலை நிறுத்த ட்ரம்ப் உத்தரவிட்ட நிலையில் ரஷ்யா மீது உக்ரைன் அதிரடியாக ட்ரோன் தாக்குதலை நடத்தியுள்ளது. (எ)

# சவுதி அரேபியாவில் இதுவரை 230 பேருக்கு மரண தண்டனை

ரியாத், ஓக. 05

சவுதி அரேபியாவில் இந்த ஆண்டில் இதுவரை 230 பேருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

வளைகுடா நாடுகளில் போதைப்பொருள் தொடர்பான குற்றச்சாட்டுகளுக்கு மரண தண்டனை விதிக்கப்படுகிறது.


இந்த நிலையில் சவுதி அரேபியாவில் போதைப்பொருள் கடத்தல் தொடர்பான குற்றங்களில் ஈடுபட்ட 8 பேருக்கு நேற்று முன்தினம் ஒரே நாளில் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மல்யுத்த வீரர் ஹல்க் ஹோகன்

- எஸ்.ஜெகதீசன்


உலகளாவிய மல் யுத்த ரசிகர்களின் இதயங்களை கவர்ந்த ஒரு பெயர் - ஹல்க் ஹோகன் (Hulk Hogan). இந்த பெயர் வெறும் மல்யுத்த வீரரின் பெயர் மட்டுமல்ல, அது ஒரு சகாப்தத் தின் அடையாளம். அவருடைய போட்டிகள், திரைப்படங்கள், மற்றும் தனிப்பட்ட வாழ்க்கை என அனைத்திலும் தனித்துவமான ஒரு காந்த சக்தி இருந்தது. அவரது போட்டிகள் வெறும் மல்யுத்த சண்டைகள் மட்டுமல்ல, அவை நாடகமும், உணர்ச்சியும், எதிர்பாராத திருப்பங்களும் நிறைந்த ஒரு பொழுது போக்கு நிகழ்வாகவே இருந்தன.




போட்டிக்கு முன்னும், பின்னும், மற்றும் சில நேரங்களில் போட்டியின் நடுவிலும், ஹோகன் தனது கையை காதுக்கு அருகில் வைத்து, ரசிகர்களின் கரகோஷத்தைக் கேட்பது போல சைகை செய்வார். "காதைக் கவ்வுதல்" (Cupping the Ear) என்று இது அழைக்கப்படும். இதனால் ரசிகர்கள் மேலும் சத்தமாக ஆரவாரம் செய்வார்கள். அவர் எவ்வளவு பெரிய சூப்பர் ஸ்டாராக இருந்தாலும், ரசிகர்களின் ஆதரவை அவர் எப்போதும் முக்கியமாகக் கருதினார் என்பதற்கான அடையாளமாக இது பார்க்கப்பட்டது.

ஹல்க் ஹோகன், டெர்ரி ஜீன் போலியா (Terry Gene Bollea) என்ற பெயரில் 1953-ல் பிறந்தார். அவரது இளமைக்காலம் இசை மற்றும் விளையாட்டு என பல துறைகளில் ஆர்வம் கொண்டதாக இருந்தது. கிட்டார் வாசிப்பதில் அவருக்கு இருந்த திறமை, ஒரு காலத்தில் அவரை ஒரு ராக் இசைக் குழுவில் சேர்த்தது. ஆனால், அவரது உடல் வலிமை மற்றும் ஈர்க்கும் தோற்றம் அவரை மல்யுத்த உலகிற்கு இழுத்துச் சென்றது.

ஹோகன் எப்போதும் மஞ்சள் நிற டீ-ஷர்ட் மற்றும் சிவப்பு நிற பேன்ட் அல்லது மஞ்சள் நிற டீ-ஷர்ட் மற்றும் சிவப்பு நிற பேன்ட் அணிந்திருப்பார். இந்த நிறங்கள் அவரது அடையாளமாகவே மாறிவிட்டன. மஞ்சள் நிறம் சூரியன், ஆற்றல், மகிழ்ச்சி ஆகியவற்றைக் குறிக்கிறது. சிவப்பு நிறம் தைரியம், சக்தி, ஆர்வம் ஆகியவற்றைக் குறிக்கிறது. இந்த இரண்டு நிறங்களும் இணைந்து ஹோகனின் தனிப்பட்ட மற்றும் போராடும் குணத்தைப் பிரதிபலித்தன. அவர் மஞ்சள் மற்றும் சிவப்பு நிற ஆடைகளை அணிந்து ரிங்கிற்குள் நுழைந்தார் என்றால், அதிரடி ஆத்திரம் அசத்தல் - all in one combo pack! கவிழ்த்து விட்ட 'ப' வடிவ மீசையைப் பார்த்தாலே பயம்



அவரது "அருள் வாக்கை" கேட்டாலே அடுத்தவர் வாய்திறக்க முடியாத ஸ்டைல்! ரசிகர்கள் உற்சாகத்தில் ஆர்ப்பரிப்பார்கள்.

1977ல் நடந்த ஹோகனின் முதல் மேடை ஒரு கிராமிய "மல்லுக்கட்டு" மாதிரி இருந்தது - சிறிய ஷோ, பெரிய கனவு. எதையும் நிர்மூலமாக்குவேன் என்றவாறே தனது "கோவணத்தை" உருவி மேடையிலிருந்தவாறே அதனை தூள் தூளாக கடித்துக்குதறினார். ஆனால் மண்டபத்திலிருந்த சிறிய நாய் குட்டிக்குக் கூட அப்போ தெரியாது, இந்த இந்த அதிரடி மனிதர்தான் ஒரு நாள் அமெரிக்க ரெஸ்லிங்கின் தலையாகப் போவார் என்று!

ஹிரோ மட்ஸூடா என்ற கடுமையான பயிற்சியாளரிடம் பயிற்சி பெற்ற பிறகு, ஹோகன் WWF-ல் (World Wrestling Federation) நுழைந்தார். அங்கே வின்ஸ் மெக்மேகன் (Vince McMahon) என்ற தொலைநோக்கு பார்வை கொண்ட நிர்வாகி, ஹோகனின் அசாத்திய திறமையையும், மக்களுடன் எளிதில் தொடர்பு கொள்ளும் அவரது குணத்தையும் கண்டறிந்து, அவரை ஒரு சூப்பர்ஸ்டாராக மாற்றினார். இந்த காலகட்டத்தில் உருவானதுதான் "ஹல்காமேனியா" (Hulkamania) என்ற தத்துவம்.

ஹோகன் தனது ரசிகர்களிடம், குறிப்பாக இளைஞர்களிடம், எப்போதும் "பயிற்சி செய், உனது பிரார்த்தனைகளைச் செய், வைட்டமின்கள் சாப்பிடு" (Train, say your prayers, eat your vitamins) என்று கூறுவார். இது அவரது "ஹல்க்மேனியா" (Hulkamania) தத்துவத்தின் முக்கிய பகுதியாகும். இது வெறும் மல்யுத்தத்திற்கு மட்டும் அன்றி, வாழ்க்கையிலும் ஒழுக்கத்தையும், ஆரோக்கியத்தையும் கடைபிடிக்க வேண்டும் என்ற செய்தியை அவர் உணர்த்தினார். அவர் ஒரு நேர்மையான, நல்ல போராளியாக சித்தரிக்கப்பட்டார்.

ஹோகன் ஒரு போட்டியில் தோற்றுப் போவது போலக் காண்பித்து, பின்னர் திடீரென தனது பலத்தைத் திரும்பப் பெறுவார். இது "வீறு கொண்டெழல்" (The Hulking Up) என்று அழைக்கப்படும். எதிராளியின் தொடர்ச்சியான தாக்குதல்களால் அவர் நிலைகுலைந்து, அவரது உடல் அசைவுகள் குறைந்து, ரசிகர்கள் சோகத்தில் மூழ்கியிருப்பார்கள். அப்போது, திடீரென அவர் தனது உடலைக் குலுக்கி, கண்களை அகல விரித்து, தனது எதிரியை முறைத்துப் பார்ப்பார். இந்த நேரத்தில், அவரது முகம் சிவந்து, உடலின் நரம்புகள் புடைத்து, அவரது வலிமை மீண்டும் திரும்புவது போலக் காண்பிப்பார். இது ரசிகர்களிடையே பெரும் உற்சாகத்தை ஏற்படுத்தும் இது மல்யுத்த வரலாற்றில் ஒரு மறக்க முடியாத தருணம். வெறும் போட்டி மட்டுமல்ல, நல்லவன் கெட்டவனை வெல்வான் என்ற தத்துவத்தின் காட்சி வடிவம்.


ராடி பைப்பர் (Roddy Piper), ஆண்ட்ரே தி ஜியண்ட் (Andre the Giant) போன்றவர்களுக்கு எதிரான போட்டிகள். அவரது மிகப் பெரிய போட்டிகள்:

ரேஸ்ல்மேனியா (WrestleMania) போன்ற பெரிய நிகழ்ச்சிகளில் அவரது தோற்றம் மல்யுத்தத்தை ஒரு பரபரப்பூட்டும் பொழுதுபோக்காக மாற்றியது.

மேடையில் நின்றவுடனே, டி-ஷர்ட் கிழிக்கிற ஸ்டண்ட்! பிரச்சனை என்றாலே, "Brother…"னு ஆரம்பிக்கிற டயலாக்! தன் பக்கத்து விலங்குக்கூட இருக்கை கொடுத்து விடும் ஹோகனின் களையாட்டம்!

இதுவே ஹோகனின் ஸ்டைல் - சும்மா ரெஸ்லிங் இல்லை, full on ஹாலிவுட் காமெடி ஆக்ஷன் 2012ல் TNA -வில் நடந்த நிகழ்ச்சி யைத்தான் ஹோகனின் கடைசி மல்யுத்த மேடை என்றே சொல்லலாம். அதுக்கப் புறம் அவர் ரிங்-க்கு வந்தாலும் பம்ப லாக கேலியும் கிண்டலும்தான் எஞ்சி யிருந்தது!

1990-களின் நடுப்பகுதியில், ஹல்க் ஹோகனின் வாழ்க்கை ஒரு புதிய திருப்பத்தை அடைந்தது. WWF-லிருந்து வெளியேறிய அவர், WCW (World Championship Wrestling) என்ற நிறுவனத்தில் இணைந்தார். அங்குதான் அவரது "நல்லவன்" பிம்பம் தலைகீழாக மாறியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாகாண...

சபைகள் முறைமையில் காணப்படும் சிக்கல்களுக்கு தீர்வு காண்பதற்கு ஆறு மாதங்களேனும் செல்லும் என்று பிறிதோர் அமைச்சர் குறிப்பிடுகிறார். மக்கள் மத்தியில் அரசாங்கத்தின்மீதான செல்வாக்கு குறைவடைந்துள்ளதால் மாகாண சபைகள் முறைமையை இரத்துச் செய்யவோ அல்லது மாகாண சபைகள் தேர்தலை தொடர்ந்து பிற்போடுவதற்கோ இடமளிக்க முடியாது.

2013ஆம் ஆண்டுக்கு பின்னர் மாகாண சபைகள் தேர்தலை நடத்த முடியாத சூழலே காணப்படுகிறது. இதற்கு 2010இற்கு பின்னர் ஆட்சியில் இருந்த அரசாங்கங்கள் பொறுப்புக்கூற வேண்டும். 2015-2019 ஆம் ஆண்டு நல்லாட்சி அரசாங்கம் எல்லை நிர்ணய ஆணைக்குழு அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு மாகாண சபைகள் தேர்தலை பிற்போட்டது. திருத்த யோசனையை முன்வைத்த அமைச்சரே குறித்த பிரேரணைக்கு எதிராக வாக்களித்தார்.

ஒன்றில் பழைய தேர்தல் முறைமைக்கு அமைய விகிதாசார முறைமையில் சிறு திருத்தங்களை மேற்கொண்டு மாகாண சபைகள் தேர்தலை நடத்த வேண்டும். அல்லது தற்போது காணப்படுகின்ற திருத்தங்களுடன் குழுவின் அறிக்கையின் யோசனையை பிரதமர் மூலம் பாராளுமன்றத்துக்கு சமர்ப்பித்து புதிய தேர்தல் முறைமையின் கீழ் தேர்தலை நடத்த முடியும்.

இரண்டு முறைமையில் ஒன்றைத் தெரிவு செய்து காலம் தாழ்த்தாது அரசாங்கம் மாகாண சபைகள் தேர்தலை நடத்த வேண்டும்.

மாகாணசபைகள் முறைமை மற்றும் மாகாண சபைகள் தேர்தல் குறித்து மூன்று திருத்த யோசனைகளை பாராளுமன்றத்தில் முன்வைத்தேன். அந்தத் தனிநபர் பிரேரணைகள் கிடப்பில் போடப்பட்டுள்ளன. தனிநபர் பிரேரணைகள் குறித்து சட்டமா அதிபர் 6 வார காலத்துக்குள் தமது நிலைப்பாட்டை அறிவிக்க வேண்டும். ஆனால், 15 அல்லது 20 வாரங்கள் கடந்த போதிலும் சட்டமா அதிபர் அறிக்கை சமர்ப்பிக்கவில்லை. மாகாண சபைகள் தேர்தலை பிற்போடுவதற்கு சட்டமா அதிபரை அரசாங்கம் பயன்படுத்திக் கொள்கிறதா என்ற சந்தேகம் காணப்படுகிறது.

அரசமைப்பின் பிரகாரம் மாகாணங்களுக்கு அதிகாரங்களை பகிர்வதாயின் அவற்றை சிறந்த முறையில் - முறையாகப் பகிர வேண்டும். மாகாண சபைகள் அதிகார பகிர்வில் பெரும் சிக்கல் நிலை உள்ளது. வலது கையால் வழங்கிய அதிகாரத்தை இடது கையால் பறிக்கும் நிலைக்கு மாகாண சபைகளின் அதிகார நிலை தள்ளப்பட்டுள்ளது. மாகாணங்களுக்கு உரித்தான அதிகாரங்களை ஜனாதிபதி தனது நிறைவேற்று அதிகாரம் மூலம் பறித்துள்ளார். சுகாதாரம், கல்வி, நிர்வாக கட்டமைப்பில் இந்த நெருக்கடி நிலைமை காணப்படுகிறது. மாகாணங்களுக்குரிய விடயதானங்கள் பலவந்தமான முறையில் மத்திய அரசுக்கு மீளப்பெறப்பட்டுள்ளன. மாகாணங்களுக்கு அதிகாரங்களை பகிர்வதாயின் முழுமையாக - முறையாக பகிர வேண்டும் அல்லது ஒன்றும் செய்யாமலிருக்க வேண்டும்.

மாகாணங்களுக்கு பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்கள் பற்றி விசேட அவதானம் செலுத்தப்படுகிறது. பொலிஸ் அதிகாரங்களை மாகாண முதலமைச்சருக்கு வழங்கினால் அது அரசியல்மயப்படுத்தப்படும் என்பதில் உறுதியாக உள்ளேன். தேசிய பொலிஸ் ஆணைக் குழு ஊடாக இந்த அதிகாரம் கண்காணிக்கப்பட வேண்டும். அத்துடன் காணி அதிகாரங்கள் தொடர்பில் காணி ஆணைக்குழு விசேட திட்டத்தை அல்லது வழிமுறையை செயல்படுத்த வேண் டும்.

மாகாண சபைகள் தேர்தல் குறித்து அரசாங்கம் மந்தகதியில் செயல்படுவதை அவதானிக்க முடிகிறது. முடிந்தால் மாகாண சபை விரைவாக நடத்துங்கள் அரசுக்கு சவால் விடுக்கிறோம் - என்றார். (ஐ)

## அர்ச்சுனாவிடம்...

திங்கட்கிழமை பிற்பகல் சி. ஐ. டி. திணைக்களத்தில் முன்னிலையான அர்ச்சுனா எம். பி. சுமார் ஒரு மணி நேரத்தின் பின்னர் அங்கிருந்து வெளியேறியிருந்தார். (ஐ)

## அரியாலை....

கருவி மூலமாகவே நேற்றைய தினம் சோதனை நடத்தப்பட்டது. இந்த சோதனை நடவடிக்கை இன்று செவ்வாய்க்கிழமையும் முன்னெடுக்கப்படவுள்ளது.

இதன் பின்னர், ஸ்கான் சோதனையின் அறிக்கை நீதிவான் நீதிமன்றில் பாரப்படுத்தப்படும். நீதிமன்ற கட்டளையின் பிரகாரம் மேலதிக நடவடிக்கை முன்னெடுக்கப்படும் - என்றும் தெரிய வருகிறது. (ஐ)

## சிறப்புரிமைகள்...

அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அத்துடன், முன்னாள் ஜனாதிபதிகளின் சிறப்புரிமைகளை இரத்துச் செய்யும் சட்டமூலம் பிரசுரிக்கப்பட்டுள்ளது. யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்த முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை இலக்காகக் கொண்டு விடுதலைப் புலிகள் அமைப்பை மகிழ்விப்பதற்காக இந்த சட்டமூலம் கொண்டு வரப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதிகளின் சிறப்புரிமைகளை இரத்துச் செய்யும் வகையில் வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டுள்ள சட்ட மூலத்துக்கு எதிராக உரிய சட்ட நடவடிக்கை எடுப்போம். முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்காக மாத்திரம் நாங்கள் போராடவில்லை. எதிர்கால ஜனாதிபதிகளுக்காகவும் தேசியத்துக்காகவும் இந்த சட்ட மூலத்துக்கு எதிர்ப்பு தெரிவிக்கிறோம்.

இந்த அரசாங்கம் வெறுப்பை மாத்திரம் முன்னிலைப்படுத்தி செயல்படுகிறது. ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க ஆட்சிக்கு வந்த எதிர்வரும் மாதத்துடன் ஒரு வருடம் நிறைவடையவுள்ள நிலையிலும் கடந்த அரசாங்கங்களை மாத்திரம் விமர்சித்துக் கொண்டிருக்கிறார். ஆனால், கடந்த அரசாங்கத்தின் பொருளாதார, அபிவிருத்தி திட்டங்களை மாற்றமில்லாமல் நிறைவேற்றுகிறார்.

2029 ஆம் ஆண்டு நாங்கள்தான் ஆட்சிக்கு வருவோம். தற்போதைய செயல்பாடுகளுக்கு அரசாங்கம் பதிலளிக்க நேரிடும் - என்றார். (ஐ)

## மனித...

ஜகன் குணதிலக, பேராசிரியர் தை. தனராஜ், பேராசிரியர் த்திமா பர்ஷான ஹனீபா, மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ்ப்பாண பிராந்திய இணைப்பாளர் கனகராஜ் உள்ளிட்டவர்கள் நேற்று திங்கட்கிழமை மனித புதைகுழிகளை பார்வையிட்டனர்.

இதன் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட அவர்கள்,

“அகழ்வு பணிகள் தொடர்பிலும் விசாரணைகள் தொடர்பிலும் தகவல் பெற்றுள்ளோம்”, என்று கூறினர்.

இதன்போது, கிருஷாந்தி கொலை வழக்கில் தண்டனை பெற்ற சோமரத்ன ராஜபக்ஷ சாட்சியமளிக்க தயார்”, என்று கூறிய கருத்து தொடர்பான கேள்விக்கு பதிலளித்த அவர்கள்,

“சிறையில் அவருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டால் மனித உரிமைகள் ஆணைக் குழு உடனடியாக நடவடிக்கை எடுக்கும்”, என்றனர்.

மேலும், 1996-97ஆம் ஆண்டுகளில் யாழ்ப்பாணத்தில் காணாமல் ஆக்கப்பட்டோரின் விசாரணைகள் குறித்து 2003ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட அறிக்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் அதிகாரபூர்வ இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது - என்றும் கூறினர். (ஐ)

# மர்மமாக காணாமல் போனவர் குளத்திலிருந்து சடலமாக மீட்பு

முல்லைத்தீவு, ஓக. 05

முல்லைத்தீவு - புலிமச்சிநாதிகுளத்தில் சந்தேகத்துக்கு இடமான முறையில் காணாமல் போன குடும்பஸ்தர் சடலமாக மீட்கப்பட்டார்.

சிவபாதம் சிறீகாந்தன் (வயது 43) என் பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட் டார்.

இந்நிலையில், காணாமல்போன குடும்பஸ்தருடைய மேற்சட்டையும் கைபேசியும் புலிமச்சிநாதி குளக்கட்டிலிருந்து மீட்கப்பட்டிருந்ததுடன் இவ்வாறு காணாமல்போன குடும்பஸ்தரின் விட யத்தில் பல சந்தேகங்களும் எழுந்துள்ளன

இத்தகைய சூழலில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் இதுதொடர்பில் தெரியப்படுத்தப்பட்டது. இதையடுத்து, பாராளுமன்ற உறுப்பினர் நேற்று காலையில் காணாமல் போனவருடைய வீட்டுக்குச் சென்று அவருடைய குடும்பத்தாருடனும் உறவினர்களுடனும் கலந்துரையாடி நிலைமைகளை அறிந்தார்.



இதைத் தொடர்ந்து, பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் மாங்குளம் பொலிஸ் நிலையத்துக்கு சென்று பொலிஸ் தலைமையக ஆய்வாளரை சந்தித்து காணாமல் போனவர் தொடர்பில் துரித விசாரணைகளை - நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வலியுறுத்தியிருந்தார்.

காணாமல் போனவரை தேடும் நடவடிக்கையில் மாங்குளம் பொலிஸார் ஈடுபடவிருந்த நிலையில் குறித்த காணாமல் போனவர் சடலமாக புலிமச்சிநாதி குளத்தில் காணப்பட்டார் என்று ஊர் மக்களால் பாராளுமன்ற உறுப்பினர் ரவிகரனுக்கு தொலைபேசியூடாகத் தெரியப்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## இந்தியாவுடனான...

நீதிபதிகள் அச்சல வெங்கப்புலி மற்றும் பிரியந்த பெர்னாண்டோ ஆகி யோர் அடங்கிய அமர்வு இந்த உத்த ரவைப் பிறப்பித்தது.

இந்த மனுக்களை மருத்துவர் குணதாச அமரசேகர மற்றும் பிற குழுவினரால் தாக்கல் செய்யப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

புரிந்துணர்வு ஒப்பந்தங்களின் உள்ளடக்கங்கள் குறித்து பொது மக்களுக்குத் தெரிவிக்கப்படவில்லை. இது அரசமைப்பின் மூலம் உறுதி செய்யப்பட்ட உரிமைகளை மீறுவதாகும் என்று அவர்கள் வழக்கு தொடுநர்கள் குறிப்பிட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## மீட்கப்பட்ட....

படவுள்ளன. இதன்போது, புதைகுழிகளிலிருந்து மீட்கப்பட்ட ஆடைகள் மற்றும் பிற சான்றுப் பொருட்கள் காட்சிப் படுத்தப்படும். இந்த நிலையில் இவற்றை பார்வையிடுவோர் பின்வரும் நிபந்தனைகளை கவனத்தில் கொள்ளவேண்டும்.

சான்று பொருட்களை காட்சிப்படுத்தும் நடவடிக்கை நீதிமன்றத்துக்கு உட்பட்ட நடவடிக்கையாக காணப்படுவதால் நீதிமன்ற நடவடிக்கைக்குரிய கண்ணியம் இதில் பங்கேற்கும் நபர்களால் பேணப்பட வேண்டும், காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பாக முறைப்பாடு செய்த நபர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். அவர்கள் தமது உறவுகள் காணாமல் ஆக்கப்பட்டது தொடர்பான ஆவணம் ஒன்றை சமர்ப்பிப்பது விரும்பத்தக்கது. ஏனைய நபர்களை அனுமதிப்பது தொடர்பில் முற்படுத்தப்படும் தரவுகள் தொடர்பில் தீர்மானிக்கப்படும்.

மேற்படி நடவடிக்கைகளில் பங்குபற்றும் நபர்களின் பெயர், அடையாள அட்டை இலக்கம் அல்லது கடவுச்சீட்டு இலக்கம் அல்லது சாரதி அனுமதிப்பத்திர இலக்கம் உள்ளிட்ட ஏனைய விடயங்கள் நீதிமன்ற உத்தியோகத்தர்களால் பதிவு செய்யப்படும். 21 வயதுக்கு மேற்பட்டவர்கள் மாத்திரம் மேற்படி நடவடிக்கையில் பங்குபற்ற அனுமதிக்கப்படுவார்கள்.

பங்குபற்றும் நபர்கள் மேற்படி நீதிமன்ற நடவடிக்கைகளையோ அல்லது காண்பிக்கப்படும் பொருட்களையோ ஒலி, ஒளிப்படங்களை பதிவு செய்வதற்கும் எந்தவோர் இலத்திரனியல் உபகரணங்களை எடுத்து வருவதற்கும் தடைவிதிக்கப்படுகிறது, மேற்படி நடவடிக்கையில் பங்குபற்றும் காணாமல்போனவர்களின் உறவினர்கள் சட்டத்தரணி ஒருவருடன் தோன்றவும் நீதிமன்றம் அனுமதி வழங்குகிறது.

இது ஒரு நீதிமன்ற நடவடிக்கையாக காணப்படுவதனால் இங்கு காட்சிப்படுத்தப்படும் உடைகள் உள்ளிட்ட ஏனைய சான்று பொருட்களை தொட்டுப் பார்ப்பதோ, கையால் எடுத்துப் பார்ப்பதோ தடை செய்யப்பட்டுள்ளது. (ஐ)

## 5 மனித...

நடக்கின்றன. இரண்டாவது கட்டமாக முன்னெடுக்கப்படும் அகழ்வில் நேற்று 30ஆவது நாளாகவும் பணிகள் தொடர்ந்தன.

இந்த நிலையில், நேற்றைய தினம் 5 மனித எலும்புக்கூடுகள் கண்டறியப்பட்டன. இதன்மூலம், இந்த மனிதப் புதைகுழிகளில் கண்டறியப்பட்ட மனித எலும்புக்கூடுகளின் எண்ணிக்கை 135 ஆக உயர்ந்தது.

இதேவேளை, நேற்றைய தினம் 6 எலும்புக்கூடுகள் புதைகுழிகளிலிருந்து அகழ்ந்து எடுக்கப்பட்டன. இதன் மூலம் அகழ்ந்து எடுக்கப்பட்ட எலும்புக்கூடுகளின் எண்ணிக்கை 126ஆக அதிகரித்துள்ளது. மீட்கப்பட்ட எலும்புக்கூடுகள் நீதிமன்றின் கட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ளன. (ஐ)

## மாகாண சபை...

முறைமை அமுல்படுத்தப்பட்டது. மக்கள் விடுதலை முன்னணி (ஜே. வி. பி.) மாகாண சபைகள் முறைமைக்கு எதிராக வன்முறையை கட்டவிழ்த்து இந்த நாட்டில் மிகப்பெரும் இனகலவரத்தை ஏற்படுத்தியது.

மாகாண சபைகள் தேர்தலுக்கு எதிர்ப்புத் தெரிவித்தவர்கள் பிற்பட்ட காலத்தில் மாகாண சபைகள் தேர்தலில் போட்டியிட்டு, பாராளுமன்றத்துக்கு தெரிவானார்கள். காலவோட்டத்தின் பின்னர் மாகாண சபைகள் முறைமையின் தேவைப்பாடு உணரப்பட்டுள்ளது.

மாகாண சபைகள் விவகாரத்தில் எதிர்கட்சிகளின் நிலைப்பாடு தற்போது ஒருமித்ததாக காணப்படுகிறது. ஆகவே, தேர்தலை நடத்துவதற்குரிய நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்கவேண்டும்.

மாகாண சபைகள் தேர்தலை நடத்துவது குறித்து ஜனாதிபதி சர்வ கட்சித் தலைவர் மாநாட்டை நடத்த வேண்டும். தமிழ் மக்களுக்கு வழங்கிய ஆணையை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்கு உண்டு. அரசியல் செல்வாக்கு பலவீனமடையும் என்பதற்காக மாகாண சபைகள் தேர்தலை நடத்தாமலிருக்க அரசாங்கம் முயற்சிக்கிறது - என்றும் அவர் கூறினார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# சஜித், நாமல் ஆகியோர் பெரும் குற்றவாளிகள்!

## சாடுகிறார் பிரதி அமைச்சர்

கொழும்பு, ஓக. 05

**அரசாங்கத்துக்கு எதிராக செயற்படுவதற்கு எதிர்க்கட்சியில் பெரும் அரசியல் புள்ளிகள் இன்றில்லை.சஜித் பிரேமதாஸ மற்றும் நாமல் ராஜபக்ஷ போன்றோர் அரசியல் தலைவர்கள் அல்லர்.இவர்கள் பெரும் குற்றவாளிகளாக சிறைக்கு செல்ல இருப்பவர்கள் என வீடமைப்பு பிரதியமைச்சர் டி.பி.ஹேரத் தெரிவித்துள்ளார்.**



ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- இன்று நாட்டில் வெளிநாட்டு கையிருப்பு சுமார் 6.5 பில்லியன் அமெரிக்கன் டொலர் இருக்கிறது.

நாங்கள் அரசாங்கத்தை பொறுப்பேற்கும் போது 3 பில்லியன் அமெரிக்கன் டொலர் கூட இருக்கவில்லை.

இன்று பொருளாதார வளர்ச்சி 8.3ஐ நாம் அடைந்திருக்கிறோம்.

நாணய நிதியத்துடன் செல்ல வேண்டிய இக்கட்டான சூழ்நிலையை கடந்த அரசாங்கம் ஏற்படுத்தியிருந்ததாலேயே, நாம் தொடர்ந்து அவர்களின் திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டியிருந்தது.

மேலும், மக்களுக்கு முடியுமான நிவாரணங்களை வழங்கி அரசாங்கத்தின் அதீத செலவுகளை குறைத்து ஒரு சாதாரண தன்மையை ஏற்படுத்தியுள்ளோம்-என்றார். (அ)

## ஆந்திரா மீனவர்கள் 4 பேர் படகுடன் கைது!

யாழ்ப்பாணம், ஓக. 05

இந்தியா ஆந்திராவைச் சேர்ந்த 4 மீனவர்கள் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கை கடற்பரப்புக்குள் சட்டவிரோதமாக எல்லை தாண்டியதாக குறித்த மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஆந்திரா தேங்காய்பட்டினம் பகுதி மீன்பிடி துறை முகத்திலிருந்து புதிதாக படகை வாங்கி கொண்டு ஆந்திரா செல்லும் வழியில் திசை காட்டும் கருவியில் ஏற்பட்ட கோளாறு காரணமாக அனுமதியின்றி இலங்கை கடற்பரப்புக்குள் நுழைந்ததால் ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த குறித்த நான்கு மீனவர்களும் ஒரு படகுடன் காங்கேசன்துறை பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் காங்கேசன் துறை கடற்படைத் தளத்துக்கு அழைத்து வரப்பட்டதுடன் விசாரணைகளின் பின்னர் மல்லாகம் நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (அ)

## சில பொருட்களுக்கு வரியை மேலும் குறைக்க நடவடிக்கை

கொழும்பு, ஓக. 05

தீர்வை வரி தொடர்பில் அமெரிக்காவுடனான பேச்சுவார்த்தைகள் இன்னும் நிறைவடையவில்லை. அந்த வகையில் மேலும் சில பொருட்களுக்கான வரியை எதிர்காலத்தில் குறைத்து கொள்ள முடியும் என எதிர்பார்ப்பதாக இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் தலைவர் மங்கள விஜேசிங்க தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- சில பொருட்களுக்கான அமெரிக்காவின் தீர்வை வரியை மேலும் குறைத்துக் கொள்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

எதிர்காலத்தில் ஏற்றுமதியை விரிவுபடுத்துவதற்காக பல்வேறு நாடுகளுடன் தீர்வை வரி இணக்கப்பாடுகளை எட்ட வேண்டியது அவசியமாகும்.

அமெரிக்காவுக்கு வருடத்துக்கு சுமார் 2.9 பில்லியன் டொலர் பெறுமதியான ஏற்றுமதிகள் இடம்பெறுகின்றன. அதேவேளை 450 பில்லியன் டொலருக்கு இறக்குமதிகள் இடம்பெறுகின்றன.

கடந்த மாதங்களில் ஏனைய பிராந்தியங்களுக்கும் எமது ஏற்றுமதிகளை விரிவுபடுத்தியிருக்கின்றோம். அந்த வகையில் ஆபிரிக்காவுக்கான ஏற்றுமதிகள் உயர்வடைந்துள்ளதை அவதானிக்க முடிகிறது.

அத்தோடு எதிர்காலத்தில் இலங்கையின் சில ஏற்றுமதி பொருட்களுக்கு தீர்வை வரியை மேலும் குறைத்துக் கொள்வதற்கான முயற்சிகளில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது-என்றார். (அ)

## தொழிலதிபரை கொல்ல சதித்திட்டம் தீட்டிய கடற்படை உறுப்பினர் கைது!

கொழும்பு, ஓக. 05

கம்பஹா பகுதியில் தொழிலதிபரொருவரை படுகொலை செய்ய சதித்திட்டம் தீட்டியதாக கூறப்படுவது உட்பட, திட்டமிட்ட ஒழுங்கமைக்கப்பட்ட குற்றத்தில் ஈடுபட்டதாக சந்தேகத்தின் பேரில் இலங்கை கடற்படை உறுப்பினர் ஒருவர் மினுவங்கொடவில் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் நடத்திய விசேட சுற்றிவளைப்பின்போதே இந்த கைது இடம்பெற்றுள்ளது.

இதேவேளை, கைது செய்யப்பட்ட நேரத்தில் சந்தேக நபர் போதைப்பொருள் வைத்திருந்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

சந்தேக நபர் ஒரு குற்றவியல் கும்பலின் வழிகாட்டுதலின் கீழ் செயல்பட்டு, இலக்கு வைக்கப்பட்ட கொலையை மேற்கொள்ள திட்டமிட்டிருக்கலாம் என்று ஆரம்ப அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

சந்தேக நபர் கம்பஹா குற்றப்பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## அரச ஊழியர்களுக்கு வீடு கட்ட கடன் வசதி

கொழும்பு, ஓக. 05

இலங்கையில் வீட்டுவசதி பிரச்னையை அடுத்த 05 முதல் 10 ஆண்டுகளுக்குள் தீர்க்க அரசாங்கம் பாடுபடுவதாக அமைச்சர் வசந்த சமரசிங்க கூறுகிறார்.

அரசு ஊழியர்களுக்கு புதிய வீடு கட்ட அல்லது வீடுகளைப் புதுப்பிக்க நிதிக் கடன்கள் வழங்கப்படும் என்றும் அமைச்சர் சமரசிங்க தெரிவித்தார்.

முந்தைய நிர்வாகங்களைப் போலல்லாமல், சரியான அமைப்பின் மூலம் பொருத்தமான நபர்கள் மட்டுமே இதற்கு தேர்ந்தெடுக்கப்படுவார்கள் என்று அவர் மேலும் கூறினார்.

"முன்னாள் அரசாங்கம் வீட்டு வசதி விளம்பர பிரசாரங்களுக்காக மட்டும் 520 மில்லியன் ரூபாய்களை செலவிட்டது. இதுவும் பொதுமக்களின் பணம்தான்," என்று அவர் குறிப்பிட்டார்.

நேற்று முன் தினம் அனுராதபுரத்தில் வீட்டுவசதி உதவி வழங்கும் நிகழ்ச்சியில் பங்கேற்றபோது அமைச்சர் வசந்த சமரசிங்க இவ்வாறு தெரிவித்தார். (அ)

## டிஜிற்றல் பொருளாதார மாதமாக செப்ரெம்பர்!

கொழும்பு, ஓக. 05

எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்தை டிஜிற்றல் பொருளாதார மாதமாக அறிவிக்க டிஜிற்றல் பொருளாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

ஜனாதிபதி அனுர குமார திஸாநாயக்கவின் ஆலோசனைக்கமைய இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

நாடு முழுவதும் டிஜிற்றல் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதே இதன் நோக்கமென டிஜிற்றல் பொருளாதார அமைச்சின் செயலாளர் வருண சிறி தனபால தெரிவித்தார்.

செப்ரெம்பர் மாதத்தில் டிஜிற்றல் பொருளாதாரத்தின் நன்மைகளைப் பெற்றுக்கொள்வது தொடர்பில் பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துதல், டிஜிற்றல் பொருளாதார கொள்கை மற்றும் அதன் செயன்முறைகளை உருவாக்குதல் உள்ளிட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார். (அ)

## அனைத்து வைத்தியசாலைகளுக்கும் தீவிர சிகிச்சைப் பிரிவுகள் வேண்டும்

### சுகாதார அமைச்சர் வலியுறுத்து

கொழும்பு, ஓக. 05

நாட்டில் உள்ள பிரதான மருத்துவமனைகளுக்கு மாத்திரம் தீவிர சிகிச்சைப் பிரிவுகள் மட்டுப்படுத்தப்படக்கூடாது என சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

மாறாகத் தீவிர சிகிச்சைப் பிரிவுகள் அனைத்து மருத்துவமனைகளுக்கும் விரிவுபடுத்தப்பட வேண்டும் என அவர் கூறினார்.

கொரோனா தொற்று பரவலின் போது அனைத்து மருத்துவமனைகளிலும் தீவிர சிகிச்சைப் பிரிவின் முக்கியத்துவம் குறித்து அதிகம் உணரப்பட்டதாகவும் சுகாதார அமைச்சர் குறிப்பிட்டார்.

எனவே, நாடளாவிய ரீதியில் உள்ள பிரதான மருத்துவமனைகளில் மாத்திரமின்றி, அனைத்து மருத்துவமனைகளிலும் தீவிர சிகிச்சைப் பிரிவுகள் விஸ்தரிக்கப்பட வேண்டும் என சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ வலியுறுத்தினார். (அ)

## இஸ்ரேலுக்கு இலவச விஸா வழங்குவதால் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இல்லை

கொழும்பு, ஓக. 05

இஸ்ரேலுக்கு இலவச விஸா வழங்கப்படுவதால் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படப் போவதில்லை என பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

தற்போது அறிவிக்கப்பட்டுள்ள இலவச விஸா விடயமானது சட்டமா அதிபரிடத்தில் ஆலோசனைக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அது இன்னமும் நடைமுறைக்கு வரவில்லை.

அதேநேரம், இலவச விஸா நடைமுறையானது ஆறு மாதங்களுக்கு ஒரு தடவை மீளாய்வுக்கு உட்படுத்தப்படும் என்பதோடு, விமான நிலையத்தில் பயணிகள் வருகையில் அதிநவீக கண்காணிப்பு கமெராக்கள் பொருத்தப்படுவதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதனைவிடவும், நாட்டுக்கு வருகை தருவதற்கு முன்னதாகவே பயணிகள் பற்றிய தகவல்களை அறிந்து கொள்வதற்கான பயணத்தின் முன்னரான தகவல்கள் சேகரிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இஸ்ரேல் உள்ளிட்ட நாற்பது நாடுகளுக்கு இலவசமாக விஸா வழங்குவதற்கு அரசாங்கம் அறிவிப்பைச் செய்துள்ள நிலையில், இஸ்ரேலில் போர்க்குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளிட்டவர்கள் நாட்டுக்குள் வருகை தரும் நிலைமைகள் இலகுவாக்கப்படுவதால் தேசிய பாதுகாப்பு கேள்விக்குறியாகும் சூழல் ஏற்படும் என்று எதிர்க்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியிருந்தனர்.

இந்நிலையில் அவ்விடயம் சம்பந்தமாக கருத்து வெளியிட்ட அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதனைவிடவும், இலத்திரனியல் கடவுச்சீட்டு விநியோக நடவடிக்கைகளும் துரிதப்படுத்தப்படவுள்ளன. அதற்கான கேள்வி அனுமதிப்பத்திரங்கள் கோரப்பட்டுள்ளன.

அம்முறை அமுலாக்கப்படுகின்றபோது, பயணிகள் குறித்த தரவுகள் மேலதிகமாக கிடைப்பதற்கு அதிகமான வாய்ப்புக்கள் ஏற்படுகின்றன என அமைச்சர் தெரிவித்தார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 05.08.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org